உ

# திருவாசக மணிகள்

சு. சிவபாதசுந்தரம்.

உ

சிவமயம்.

# திருவாசக மணிகள்

புலோலி

சு. சிவபாதசுந்தரம் B. A.

திருவாசகத்திலிருந்து எடுத்தவை.

இவை

ஒடியார்செய்த உரையோடு

கொழும்பு விவேகானந்தசபையாரால்

வெளியிடப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

ஈசுவர௵ ஆவணிமீ.] 1937 [விலை சதம் ௨௰

*Copyright Registered.*

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
68, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

# பதிப்புரை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகப்பதிகங்களிலிருந்து உரையோடு வெளியிடப்பட்ட திருவாசகமணிகள் என்னும் சிறியநூல், திரு. சு. சிவபாதசுந்தரம், B. A. அவர்களால் சென்ற ஸ்ரீமுக வருஷ மாசி மாதத்தில் வெளியிடப்பட்டது. முதற்பதிப்பு பிரதிகள் யாவும் செலவாய்விட்டபடியால், இவ்விரண்டாம் பதிப்பு எம்மால் வெளியிடப்படுகின்றது.

இந்நூலின் பதிப்புரிமையை மனமுவந்து அன்புடன் எமக்கு அளித்த இச்சைவப்பெரியாருக்கு எமது வந்தனம் உரியது.

கோழும்பு விவேகானந்த சபையார்.

ஈசுவர வருஷ ஆவணி மீ உ௯-ம் உ

(13–9–37.)

சிவமயம்.

# முகவுரை

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்"
என்பது ஆன்றோர்வாக்கு.

திருவாசகமானது சிவஸ்துதியாயும் சிவஞானநிதியாயும் சிவஹஸ்த அருட்பொலிவினதாயும் இருத்தலால், இதனைப் பெரியோர் வேதம் என்று சொல்லுவர். இது எம்முடையமொழியிலே தோன்றினமையால் வடமொழியிலுள்ள வேதத்திலும் சிறப்புடையதாயிற்று. இச்சிறப்பைச் சிவப்பிரகாசசுவாமிகள்,

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

என்னுங் கவியில் விளக்கி அருளினர்.

இத்திருவாசகம் பத்திச்சுவைமுற்றியிருத்தலால் தேனென்றும், சிவபிரானது திருவருள் நிறைந்திருத்தலால் "தளைநீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியது" என்றும் ஆன்றோர்பாடியருளினர். இது ஸ்துதிநூலென்பது பார்க்கவே புலப்படும். ஆயினும், பெரியோர்கள் இது ஞானநூலெனக்கண்டு இதிலுள்ள ஒவ்வொருபதிகத்திலும் பேசப்படும்பொருளை அதனதன்தலைப்பிலே குறித்துக் காட்டினர். சுவையிலும் பயனிலும் பொருளிலும் ஒப்புயர்வற்ற இத்திருவாசகத்தைக் கல்லாத தமிழ்ச்சைவர்கள் மறுமை நலத்தை இழப்பதுமன்றி இம்மையில் அனுபவிக்கத்தக்க இன்பங்களுட் பெரும்பகுதியை அனுபவியாமலும் அறியாமலும் நிர்ப்பாக்கியராகின்றனர்.

சென்னைச் சைவபரிபாலனசபையார் மிகக்குறைந்த விலையாகிய இரண்டணாவுக்கு ஒருபிரதி விற்கக்கூடியதாக இதை அச்சிட்டமையால் இந்நிர்ப்பாக்கியத்திற் பெரும்பகுதி நீங்கியது. ஆயினும், சொற்பொருளுணராமையால் இந்நூலில் வாஞ்சைகொள்ளாதவர்கள் பலருளராதலால், இதிலே பற்றுண்டாக்குதற்காக ஒவ்வொரு பதிகத்திலிருந்தும் திருப்பாடல்கள் ஸ்தாலீபுலாகமாக எடுத்துப்பொருளெழுதலாயது. இதன்மெய்ப்பொருள் சிவஞானச்செல்வருக்கே புலப்படுவதாதலால், இங்கே கூறப்படுவது வெண்பொருளாம். இவ்வெண்பொருள்தானும் பிழையற்றதென்று சொல்லுதற்கிடமில்லாமையால், இதைக்கற்போர் இதிலுள்ள பாடல்களைப் பாராயணம் செய்வதே முதல் நோக்கமாகக்கொள்க.

கந்தவனம், யாழ்ப்பாணம்.<br>ஸ்ரீமுக௵ மாசிமகம்.

சு. சி.

# உள்ளுறை.


க. சிவபுராணம். ... ... க

௨. கீர்த்தித்திருவகவல் முதலிய மூன்று பதிகங்கள் ௮

௩. திருச்சதகம். ... ... ௧௭

௪. நீத்தல் விண்ணப்பம் .... ... ௨௨

௫. திருவெம்பாவை முதலிய ஒன்பது பதிகங்கள் ௨௬

௬. திருக்கோத்தும்பி முதலிய நான்கு பதிகங்கள் ௩௭

௭. திருப்பள்ளியெழுச்சி முதலிய மூன்று பதிகங்கள் ௪௨

௮. கோயிற்றிருப்பதிகம் முதலிய நான்கு பதிகங்கள் ௪௬

௯. அடைக்கலப்பத்து முதலிய எட்டுப்பதிகங்கள் ௫௯

௧௦. வாழாப்பத்து முதலிய பதினேழு பதிகங்கள் ௬௩

உ

சிவமயம்.

# திருவாசகமணிகள்.

## க. சிவபுராணம்

### சிவனது அநாதிமுறைமையான பழமை.

இந்தப்பதிகத்திலே கடவுள்வாழ்த்தும் கடவுளின் அநாதியானதன்மையுங் கூறப்படுகின்றன. புராணமென்பது பழமை. கடவுளின் தன்மையோடு அவருடைய திருவருளின் தன்மையுஞ் சொல்லப்படுகின்றது.

### கடவுள்வாழ்த்து.

*“நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள்வாழ்க”* (க)

*இதிலே சிவபிரானைத் தியானித்தற்குரிய திருமேனிகளுட் சிறந்ததொன்றாகிய மந்திரத்திருமேனி வாழ்த்தப்படுகின்றது. *நமச்சிவாய என்னும் மந்திரம் திருமேனியாதல் பின்வருமாறு:—*

(க) சகளவடிவத்தில்,

*நகரம் — கால்கள்*
*மகரம் — வயிறு*
*சிகரம் — தோள்கள்*
*வகரம் — முகம்*
*யகரம் — தலை.*

---

* *“மந்திரமத்துவாவின் மிகுத்தொருவடிவமாக”*
— சிவஞானசித்தியார்: க. சூ., ருஎ செ.

*“ஆனுக்கென்றே வைத்ததா மந்திரங்கள் வடிவெனமறைகளெல்லாம்”*
— சி. சி: க. சூ., ருஅ செ.

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

(உ) சகளநிட்களவடிவத்தில்,

நகரம் — கீழ்ப்பதுமம்
மகரம் — கண்டம்
சிகரம் — மேற்பதுமம்
வகரம் — நாளம்
யகரம் — லிங்கம்

யகர மிலிங்கமாம் நாளம் வகாரஞ்
சிகாரமேற் பீடந் தெரிக்கின்—மகாரந்தான்
கண்டமே யாகுங் கவிஞ ரடிப்பீடம்
பண்டிகழு நஃகாரமை யார்.

நகரம் — சத்தியோசாதம்
மகரம் — வாமம்
சிகரம் — அகோரம்
வகரம் — தற்புருஷம்
யகரம் — ஈசானம்

நகாரமே சத்தியோ சாதமுக நாடின்
மகாரந்தான் வாம மதிக்கச்—சிகாரம்
அகோரம் வகாரம் தற்புருட மாகும்
யகாரமீ சானமுக மென்.

இத்திருவைந்தெழுத்தைத் தேவாரகர்த்தாக்களாகிய அப்பர் சுந்தரர் ஒவ்வொருபதிகத்திலும் சம்பந்தர் இரண்டுபதிகங்களிலும் துதித்தார்கள். மாணிக்கவாசகப்பெருமான் தமதுமுதற்பதிகமுதலிலே, "நமச்சிவாய வாஅழ்க" என்றும்,

திருச்சதகத்தில்,

"போற்றிஓம் நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றிஓம் நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றிஓம் நமச்சி வாய புறமெனப் போக்கல் கண்டாய்
போற்றிஓம் நமச்சி வாய சயசய போற்றி போற்றி" (கூஉ)

என்றுந்துதித்தனர்.

அன்றியும்,

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய்மூர்க்கனேற்கே"*(உஎ)

என்னுந் திருவாசகத்திலே பிறவிக்கடலிலே ஆழாமற்காப்பது திருவைந்தெழுத்தென்றும்,

சேத்திலாப்பத்தில்,

†"மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வர்மணி கண்டத்தெம் அமுதே
நாயி னேனுனை நினையவு மாட்டேன்
நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகினின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே (எ)

என்னுந் திருப்பாசுரத்தில் திருவைந்தெழுத்தை ஓதாதவர்பேயரென்றும் பாடியருளினார்.

---

*இ—ள்:- எம்பெருமானே! மூடனாகியநான் பிறவியாகிய கடலிலேயிடப்பட்டுத் துன்பமாகிய அலையினால்மோதப்பட்டும் ஓர் ஆதரவுமின்றித் தனியாகநின்று இச்சைப்பொருள்களாகிய காற்றினாற் கலக்குண்டும், இச்சையாகிய சுறவினுடையவாயிலகப்பட்டும், ஆழ்ந்துபோகாமல் என்னைத் தூக்கிவைத்துக்கொண்டிருக்கும் திருவைந்தெழுத்தைப் பிடித்துக்கொண்டிருந்தமையால் எல்லையில்லாத இன்பத்தைத்தரும் முத்தியாகிய கரையைக்காட்டி என்னை ஆட்கொண்டருளினை.

† இ—ள் அறிதற்கரியவனே, அலைகள்வீசுந் திருப்பாற்கடலிலே தோன்றிய நஞ்சையுண்டு அழகிய திருக்கண்டத்திலேதாங்கி அடியவர்களுக்கு அமுதைக்கொடுத்தகடவுளே, நாயேன்உன்னைத்தியா

திருவைந்தெழுத்தின் வகைகளுட் சிகாரபிஞ்சாட்சாத்தை ஓதத்தக்கவர்கள் பெருந்தவஞ்செய்தவர்களேயாம். இவ்வுண்மையைத் திருவேசறவிலே,

*"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனுயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனூரு முயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே" (௧௦)

என்று மாணிக்கவாசக சுவாமிகள் தெருட்டியருளினர்.

---

ணிக்கமாட்டாமல் வருந்துகின்றேன். திருவைந்தெழுத்தைச்சொல்லி உன்னுடைய திருவடிகளை வணங்காத பேயனாயினும் எனக்கு முத்திநெறியினைக்காட்டு. இரக்கக்குறியாக இளம்பிறையைத்தாங்கிய திருச்சடாமுடியையுடையவனே ஐயனே, தூரத்திலே யான் நின்றலறுவது உனக்கு அழகாமோ? திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானே.

திருவைந்தெழுத்தின் தன்மையையும்பெருமையையும் அறியாத வடமொழிப்பகைவர்சிலர் அதையொருவடமொழி வசனமென்று நினைத்து அதற்கிணையான தமிழ்வசனத்தைச்சொல்லுதல் திருவைந்தெழுத்தைச் சொல்வதற்குச் சமமாகுமென்று மயங்குகிறார்கள். திருவைந்தெழுத்து ஒரு வசனமாகவேனும் சொற்றொடராகவேனும் பெரியோராற் கருதப்படவில்லை. அது ஐந்தெழுத்துக்களாலாக்கப்பட்ட ஒரு மந்திரம். அது வடமொழியிலே பஞ்சாட்சரம் என்றும் தமிழிலே ஐந்தெழுத்தென்றும் சொல்லப்படும். அது எழுத்தென்று சொல்லப்படுவதேனெனில், அதன்பொருள்எழுத்துக்களின்பொருளேயாதலால். திருவைந்தெழுத்தை ஒரு வசனமாகக் கொண்டு பொருள்கண்டால், அதில் ஒரு சிறப்புமில்லையாம். அப்படிப்பட்டவொன்றைச்சமய குரவர்களும் சந்தான குரவர்களும் உச்சிமேற்கொண்டு போற்றியதும் தகாததாய்முடிந்துபோம்.

* இ—ள். நான்தானோதவஞ்செய்தேன்! முத்தியைத்தருவதாகிய திருவைந்தெழுத்தினைப்பெற்றேன். தேனாகியும் இனிய அமுதமாகியுந் தித்திக்கின்ற சிவபெருமான் தானேவலியவந்தருளி எனது உள்ளத்துட்புகுந்து உடம்போடுயிர்வாழுதலைக் கண்டித்து அதை வெறுக்கும்படி யெனக்கருள்செய்தான்.

திருவைந்தெழுத்தின் பெருமையையும் அதை ஓதுவதாற் பெறும் பயனையும் தேவாரத்திலும் திருமந்திரத்திலும் சிவப்பிரகாசம் திருவருட்பயன் முதலிய சித்தாந்த சாஸ்திரங்களிலும் காண்க.

## சிவபிரானின் தன்மை.

"ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க" (ரு)
"மெஞ்ஞான மாகிமிளிர் கின்றமெய்ச் சுடரே" (௩அ)
"ஆக்கம் அளவு இறுதி இல்லாய்" (சக)
"மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" (சரு)
"போராது நின்ற பெருங்கருணைப் பேராறே" (௬௬)
"ஆற்றின்ப வெள்ளமே" (எச)

சிவபிரான் ஏகனாகியும் அநேகனாகியும் இறைவனாயு முள்ளவர். அவர்உயிர்களோடு தொடர்பின்றிநிற்கும் சுயம் பிரகாசமானதன்மையில் ஏகனாய்ச்சிவனெனவும், உயிர்க ளுக்குயிராய் அநேகனாய்ச்சத்தியெனவும், ஐந்தொழில்க ளைச்செய்யும்வகையால் இறைவனாய்ப்பதியெனவுஞ் சொல் லப்படுவர். † அவர் ஆக்கம் அளவு இறுதி இல்லாதவர். சொல்லுக்கும் மனதுக்கும் எட்டாதவர். ஆன்மாக்களை விட்டு விலகாத இரக்கமாகிய பெரும்பிரவாகமாயும், மெஞ் ஞானவொளியாயும், இன்பவெள்ளமாயுமுள்ளவர்.

## சிவபிரானது திருவருளின் தன்மை.

(க) புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
(உ௬-௩க)

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய் -(சஉ)

---

† திருவுந்தியார்—ஏகனுமாகி அநேகனு மானவன்
நாதனு மானா னென்றுந் தீபற
நம்மையே யாண்டா னென்றுந் தீபற.

மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற் குநல்கி (௫௧-௫௮)
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க (௩-௪)
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க (௩-௪)
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க (௨)
கரங்குவிவா ருள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க (௯-௧௦)
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே. (௬௪)

திருவருளானது புல், பூடு, புழு, மரம் முதலியபிறவிகளையாக்கி அவற்றைக்காத்து அழித்து மயக்கத்தைத்தருவதாகிய ஆணவஇருளை அறம், பாவம் ஆகிய கயிற்றாற்கட்டி மறைத்தற்றொழிலைச்செய்யும். பின்பு அதுவேகுருமணியாகவந்து ஆகமஞானத்தையூட்டி ஐந்தாவதாகிய அருளல் என்னுந்தொழிலைச்செய்யும்.

ஒருதூரதிருஷ்டிக்கண்ணாடியானது தூரத்திலுள்ள பொருள்களை அண்மைப்படுத்தி அவைகளின் உண்மையான தன்மையைக்காட்டுவதுபோல, ஆகமம் அறிதற்கரிய பொருளின் உண்மையான தன்மையைக்காட்டும்.

திருவருளானது இமைப்பொழுதும் நீங்காமல் ஆன்மாவோடுநின்று ஓங்காரமாகியபிரணவமாகி மனம், புத்தி, அகங்காரம், சித்தம், புருஷன் ஆகியதத்துவங்களை ஓயாமற்றொழிற்படுத்தும். அப்படித்தொழிற்படுத்தி வருங்காலத்திலே, ஆன்மாவானது சிவபிரானைத்தியானித்து அவரு

டையதன்மையையே மனதிலேபதித்து அவரைக்கைகுவி த்துத் தொழுதும், சிரசினால் வணங்கியும்வரும். இது பெரு மகிழ்ச்சியை உண்டாக்கி உடம்பிறுன புறப்பற்றுக்களை யறுக்கும். இவ்வாறே இந்தத்திருவருளானது ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களையும் நீக்கிச் சிவானந்தப் பெருவாழ்வைக் கொடுக்கும்.

## உ. சிவபத்தியைவளர்க்கும்முறை.

சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான், (கஎ-உ0)

என்னுந் திருவாக்கிலே, சிவபுராணஞ்சொல்லுதற்குச் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கவேண்டுமென்றும் அவைகளை வணங்குதற்கு அவருடைய பேரருள்வேண்டு மென்றும் அவ்வருளைப்பெறுதற்கு அவரை இடையறாது சிந் திக்கவேண்டுமென்றும் மணிவாசகப்பெருமான் பாடியருளி னர். சிவபத்தி வளர்வதெப்படி என்பதே அனேகருடைய பெருங்கவலை. சிவபிரானைப் பத்திசெய்யவேண்டுமென்று எவ்வளவுவிரும்பினாலும், அந்தவிருப்பம் பத்தியை வளர்க்க மாட்டாது. அவரேமெய்ப்பொருளென்றும் அவரே நாம் அடையவேண்டிய பொருளென்றும், இப்படிப்பலவாறாக நினைத்தாலும் பத்திவாராது. அவரை அடிக்கடி சிந்தித்து அவரிலே எமதுமனத்தைச்செலுத்தினால்பத்தியுண்டாகும். மனம் எதிலே செலுத்தப்படுகின்றதோ அதனைப்பற்றுவது அதன்இயல்பு. மனதைக் கடவுளிலே செலுத்திவந்தால் அது கடவுளைப்பற்றும். அப்போதுகடவுள்மேற்பத்தி உண்டாகும்.

"அவன் தாள் வணங்கி" என்றதிலே "தாள்" = சிவஞானம்.*

* "அவனடி அவ்வொளி ஞானமாதலானும்" சி. சி. கூ-ச

*மாயப்பிறப்பறுக்கும் மன்னனடிபோற்றி* (கச)

*மாயப்பிறப்பென்றது நிலையற்றபொருட்களை நிலையான பொருட்களாகவும் நிலையானவற்றை நிலையற்றனவாகவுங் காட்டும் ஆணவத்தடையையுடைய பிறவி. இந்த உடம்பு நிலையற்றதென்பதை யாவருமறிவர். ஆயினும் பகலிலும் இரவிலும், விழிப்பிலும் கனவிலும் இந்தஉடம்பு நிலையானதென்று நினைத்து இதற்குவேண்டிய இன்பங்களைத் தேடுதலே எமது முயற்சியாக நாம் துணிந்துகொண்டோம். மெய்ப்பொருளாயும் உயிர்க்குயிராயும் நித்திய சுகத்தைத் தருவதாயுமுள்ள பரம்பொருளை எமக்கு உரிய பொருளாக நாம் கொள்வதில்லை. இந்த இரண்டுவகையான மனப்போக்கையும் உண்டாக்குவது ஆணவமாம். உலக இன்பங்களைப் பெறுதற்கும் உலகத் துன்பங்களை நீக்குதற்கும் நாம் செய்யும் முயற்சியிற் கோடியில் ஒருபங்குதானும் ஆன்மலாபத்தைப்பெறுதற்கு நாம்செய்யமாட்டாமலிருக்கின்றோம். இந்த மயக்கம் நீங்கும்போது பிறவிநீங்கும். இந்த மயக்கமே பிறவிக்குக்காரணம் என்பதை,*

> *"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்*
> *மருளானும் மாணாப்பிறப்பு"*
> *என்னுந் திருக்குறளிலுங்காண்க.*

---

## உ. கீர்த்தித்திருவகவல்—திருவண்டப்பகுதி—போற்றித்திருவகவல்.

---

சிவபுராணத்திலே தொகுத்துச்சொல்லப்பட்ட வாய்மைகள் அடுத்தமூன்றுபதிகங்களிலும் விரிக்கப்படுகின்றன. அவற்றுள் சிவபிரானது திருவருட்பெருமை கீர்த்தித்திருவகவலிலும், சிவபிரானது தூலசூக்குமவியல்புகள் திருவண்டப்பகுதியிலும், உலக மூற்பத்தியாகி ஆன்மாக்கள்தோன்றி இறுதியிலே கடவுளையடையும் முறைமை போற்றித்திருவகவலிலும் சொல்லப்படுகின்றன.

---

# கீர்த்தித்திருவகவல்

## சிவனது திருவடிப்புகழ்ச்சிமுறைமை.

க. ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத்திருந்
துற்றவைம் முகங்களாற்பணித் தருளியும். (கஅ-உ0)

இதிலே "அவை" யென்றது முந்தியவரியிலுள்ள ஆகமங்களை. இதனால் ஆகமங்கள் சிவபிரானது அருள்வடிவத்தினின்றும் தோன்றியவையென்பது பெறப்படும். ஆகமங்களிலுள்ள ஞானவாய்மைகள் சிற்றறிவினராகிய மனிதருக்குப் புலப்படமாட்டா. ஆதலால் அவைகள் சிவபிரானது திருவருளாலேயே தோன்றத்தக்கவை என்பது யுத்தியினாலும் பெறப்படும்.*

உ. மூல மாகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏ லுடைத் தாக எழில்பெற அணிந்தும். (கககக-ககச)

இதன்பொருள்: அனாதியான ஆணவம் கன்மம் மாயையாகிய மூன்று மலங்களையும் அறுப்பது சிவபிரானது நிர்மலமான அருள்மேனியினின்றுந் தோன்றும் ஞானஒளியாம். ஆன்மாக்கள் இந்த மலங்களினின்றும் நீங்குவதிலே சிவபெருமான் காதலுடையராகி அதற்கு அறிகுறியாகச் செங்கழுநீர்மாலையை அழகாக அணிந்தும்.

இது மும்மலங்களுண்டென்னுஞ் சைவசித்தாந்தக் கொள்கையை உறுதிப்படுத்துகின்றது.

---

*தென் ஆபிரிக்காவிலிருந்த காப்பிரிகள் ஐரோப்பிய வியாபாரிகளுக்குப் பொற்கட்டிகளைக்கொடுத்துக் கண்ணாடிசீப்பு முதலியவைகளைப் பெற்றதுபோல, நம்மனோர் சிலர் சிவவாக்காகிய ஆகமங்களை விடுத்துத் தம்முடைய சிற்றறிவுக்கெட்டும் வீண்கருத்துகளைப் போற்றி வாழுகின்றனர்! மணிவாசகப்பெருமானைத் துதிப்பவர்கள் சிலர் அவர்அருளிய இந்த உண்மையை இகழ்கின்றனர்! கோயில்களிலேவணங்குபவர்கள் கோயில்களுக்குப் பிரமாணமான ஆகமங்களை நிந்திக்கின்றனர்!

# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது.

க. அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன். (க-ரு)

இதன்சாரம்:- கோடிக்கணக்கான அண்டங்களாக விரிந்த எல்லையில்லாத பிரபஞ்சமானது வீட்டுக்குள்ளே தனித்துச்செல்லும் சூரியகிரணத்தால்மாத்திரம் கண்ணுக்குப்புலப்படும் ஒரு சிறிய அணுவென்றுசொல்லத்தக்கதாகப் பெருமைவாய்ந்தவர் சிவபிரான்.

இதனாலே சிவபெருமானுடைய பெருமை எவ்வளவென்பது நினைக்கத்தக்கதாயிருக்கிறது. சிவபிரானோடு எண்ணும்போது பிரபஞ்சம் முழுவதும் கண்ணுக்குத் தோன்றாத அணுவாவதுபோல, பிரபஞ்சத்தோடு எண்ணும்போது பூமியும், பூமியோடெண்ணும்போதுளந்தமனிதனும் அணுவாதல் உணரத்தக்கது. இதிலிருந்துசிவபிரானோடெண்ணும்போது எந்தப்பெரிய மனிதனும் என்ன ஆவான்என்பதை அனுமானிக்கலாம். மனிதர் இத்துணைப் புல்லியர். கோயில்களுக்குப்போய்க் கடவுளைமதியாமல் தங்களுடையபெருமையை நாட்டவேண்டுமென்போரும், கடவுளுடைய பூசையை நேரத்திற்கு நடத்தாமல் வீண் பொழுதுபோக்குகளை மேலாகமதித்து அவற்றை நடத்துபவர்களும், பிறவகையாலும் கடவுளைமதியாமல் நடந்துகொள்ளுபவர்களும் இந்த வாசகத்தைக்கண்டு நல்வழிப் படுவார்கள்.

௨. சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க. (சக-சஉ)

இதிலிருந்துவிளங்கத்தக்கது: சிவபெருமான் மனதுக் கெட்டாதவர்; ஆயினும் பத்தர்களின் மனதிலே, வலையில் அகப்படும் மீனைப்போல, அகப்பட்டு அங்கு நீங்காது நிற்பவர்.

௩. பந்தமும் வீடும் படைப்போன் காண்க

இங்கே பந்தமென்றது ஐந்தொழில்களுளொன்றாகிய மறைத்தலை. *மறைத்தலாவது ஆணவத்தைத் தொழிற் படுத்தி அதன் வலியைக்கெடுத்தலாம்.

௪. பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய
..............................................
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி
..............................................
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுற
..............................................
அருச்சனைவயலுள் அன்புவித்திட்டுத்
தொண்ட உழவர் ஆரத்தந்த
அண்டத்தரும் பெறன்மேகன் வாழ்க. (சுசு-கூ௫)

இதிலே முப்பதுவரிகளுண்டு. சிவாநந்தமாகிய கடலானது முகிலாகித் திருப்பெருந்துறையாகிய மலையிலேறி, அருளாகிய மின்னலையும் முழக்கத்தையுஞ்செய்து, ஐம்பொறிகளாற் பற்றப்படும் ஆசைகளாகிய பாம்புகளை ஓட்டி, மழையைச்சொரிந்து, மெய்ஞ்ஞானமாகிய வெள்ளத்தை உண்டாக்கி அடியார்களுடைய வழிபாடாகிய வயலுக்குச் சென்று அவர்களுக்கு உதவும் முறைமை அதியற்புதமாகச் சொல்லப்படுகிறது.

---

* சிவஞானபாடியம்—இரண்டாஞ்சூத்திரவிசேடவுரையிற்காண்க

# போற்றித்திருவகவல்

## சகத்தினுற்பத்தி.

---

க. நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுர ணேன மாகி முன்கலந்
தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சய சய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா வெறும்பீ றாய
ஊனமி லியோனியி னுள்வினை பிழைத்து
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்து
மாண்டுக டோறு மடைந்தவக் காலை
யீண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயி

லொருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
மத்தக் களிறெனு மாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் மல்லலிற் பிழைத்து
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும். (க-சரு)

இந்த நாற்பத்துமூன்றுவரிகளிலும் மனிதப்பிறவியின் அருமையும் ஆன்மா மனிதப்பிறவியைப் பெற்றபின்கடவுளைச் சிந்தித்தலின் அருமையும் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன.

இதன்சாரம்- பிரமா முதலிய தேவர்கள்வணங்கிநிற்கத் தமது இரண்டுஅடிகளால் மூவுலகங்களையும் அளந்தவரும், முனிவர்கள்யாவரும் தம்முடைய ஐம்புலன்கள்பிரகாசித்து நிற்க வணங்கித்துதிக்கும்ஒளிபொருந்திய திருமுடியையுடையவருமாகிய மகாவிஷ்ணுமூர்த்தியானவர் மிதந்தபலத்தையுடைய பன்றிவடிவையெடுத்து ஏழுலகங்களையும்பிளந்துசென்று காணமுடியாது இளைத்தபின்னர்க் காலாதீதராகிய சிவபிரானை சய சயவென்று துதித்துங் காணமுடியாத அவருடைய திருவடிகள். அத்திருவடிகளை வணங்குதற்கு, ஆன்மாவானது மற்றெல்லாப்பிறவிகளையும் ஒழித்து மனிதப்பிறவியைப் பெறவேண்டும். மனிதப்பிறவியை எடுத்தாலும் கடவுளை வழிபடுதற்குப் பலவகையான தடைகள்நேரும். கர்ப்பத்திலிருக்கும்போதே ஒவ்வொருமாதமும் பெரியஇடர்களுண்டாகும். இவைகளைக் களைந்து பத்தாம் மாதத்திலே பூமியிலே பிறக்கும்போது வருந்துன்பக்கடலைக் குழந்தையுந் தாயுங் கடக்கவேண்டும். அதன்பின் நல்லறிவுவரத்தக்க வயதுவரமுன் பலவேறு

வகைப்பட்ட தடைகள் நேரும். இவைகளையுங் கடந்த பின்புதான் கடவுளைப்பற்றிய சிந்தனையுண்டாகும். சிவ பிரானைச் சிந்திக்கும் நிலைமையைப்பெறுதல் மிக அரிது என்பது இதிலிருந்து விளங்கத்தக்கது. இவ்வளவு அருமை யாகப் பெற்றநிலையை நாங்கள் பாராட்டி, அதன்பயனைப் பெறுதற்கு இயன்ற அளவும் சிவபிரானது திருவடிகளை வணங்கவேண்டுமென்பது இதனால் ஊகிக்கத்தக்கது.

உ. மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தா அர்த்து
உலகா யதமெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி. (ருச-ருள)

இதிலே மாயாவாதம், சண்டமாருதத்திற்கும் உலகாய தம் கொடியபாம்பிற்கும் உவமிக்கப்பட்டன. மாயாவாதம் ஆன்மாவே கடவுளென்றுசொல்லிக் கடவுளை மறைத்தலி னாலே, அதுசகல தீமைகளையும் விளைக்கத்தக்கது. உலகாய தம் கடவுளை முற்றாக மறுத்தலினாலே அதன்போதனை கொடியவிஷமாகின்றது.

ந. தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்
கற்று மனமெனக் கதறியும் பதறியும். (கூ0-எக)

இந்தப் பதினன்குவரிகள் மெய்யன்பின்தன்மையை விளக்குகின்றன. கம்பித்து—நடுங்கி, கொடிறு—குறடு, மறுகி—அன்பினுற்கலங்கி, விதிர்த்தல்—அஞ்சுதல், சகம்—உலகம், கோணுதல்—வழுவுதல், அனுகு (கூ) லமாய்—துணையாய், சதுர் இழந்து—தன்முயற்சியைவிட்டு, அறிமால்—உண்மையைஅறிவதிலே பேராசை, கற்று—கன்றையுடைய பசு.

அஞ்சே லென்றிங் கருள்வாய் போற்றி (கஎஉ)

இ—ள்:- பயப்படாதேஎன்று எனக்கு இங்கே அருள்பவரே, உம்மைவணங்குகின்றேன்.

ஒருவருக்குத் துன்பமில்லாதகாலத்திலும் துன்பத்தை ஆக்குவது அச்சமாம். இது எல்லாப்பிராணிகளிலும் உள்ளது. ஆயினும் எங்களுடைய அச்சத்திற் பெரும்பாலானது அவசியமற்றது. பொருள் பண்டம் மோசம்போய்விடு மென்றேனும் பகைபிணிகளால் இடர்வருமென்றேனும் அஞ்சுவது பேதைமை. இவைகள் வருமென்றெண்ணுதற்குப் போதிய ஆதாரமின்றி அஞ்சுவது பேதைமையுட்பேதைமை. ஆயினும் அஞ்சிவிலகவேண்டியதொன்றுண்டு—அது தீவினை. இங்கே மணிவாசகப்பெருமான் அஞ்சுவது வாசனை மலத்தால்வாத்தக்க தீவினையாம்.

அச்சமுள்ளவருக்கு "அஞ்சாதே" என்று தக்கவர் ஒருவர் சொல்வதினுற் பெரிய ஆறுதல் உண்டாகும். சிவபிரானே அவ்வாறு சொல்லியருளுவதானுல் அது எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருமல்லவா? சகளவடிவங்களிலுள்ள அபயம் என்னுந் திருக்கரம் "அஞ்சேல்" என்று சொல்லுகின்றது. ஆதலால் அதைக்காணுந்தோறும் எம்முடைய கவலைகளெல்லாந்தீர்ந்து சிவபெருமானுடைய திருவருளைப்பெறும் ஒருகவலையே கவலையாய்நிற்கும்.

மாணிக்கவாசகப்பெருமான் சிவபிரானுடைய திருவடிகளை அடையமுன் தம்மை "அஞ்சல்" என்று சொல்லுவார் ஒருவருமின்றித் தாம்வருந்தியதாகப் பின்வரும் திருவாசகத்தைப் பாடியருளினர்:—

என்னை அப்பா அஞ்சலென்பவர் இன்றிநின் றெய்த்தலைந்தேன், மின்னையொப் பாய்விட் டிடுதிகண்டாயுவமிக்கின் மெய்யே, உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே, அன்னையொப் பாய்எனக் கத்தனொப்பாய் என் அரும்பொருளே.

இ—ள்: "தம்பி! பயப்படாதே" என்று எனக்குத் தேறுதல் சொல்லுபவர் இல்லாமல் மனஞ்சலித்து நான் அலைந்தேன். மின்னல்போன்ற பேரொளியாகிய ஞானவடிவத்தையுடையவனே! என்னைக்கைவிடலாகாது. உனக்கு உண்மையான ஒருஉவமைசொல்லுகில் நீதான் உனக்கு உவமையாவாய். நிலைபெற்ற உத்தரகோசமங்கையிலெழுந்தருளிய எமதுதலைவனே! எனக்கு அன்னையையும் அப்பனையும்போன்றவனே! நான்பெறுதற்கரிய பொருளே!

மணிவாசகப்பெருமான் சிவபிரானுடைய அருமைத்திருவாயால் அஞ்சேலென்று சொல்லுவதைக்கேட்க ஆசையாயிருக்கிறதென்று ஆசைப்பத்திலே பாடியருளினர்:—

வெஞ்சேலனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன்நாயேன் ஞானச்சுடரேநானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

இ-ள்: சேல்மீன்களையொத்த கண்களையுடையபெண்களின் ஆசையாகிய வலையிலகப்பட்டு நாயினேன் வருந்தினேன். * ஞானமாகிய ஒளிவடிவினையுடையவரே, மிருதுவான

---

* மணிவாசகப்பெருமான் பெண்கள் வலையிலகப்பட்டது முற்பிறவிகளிலென்று கொள்க. ஞானவான்களுக்கு முக்காலமும் ஏகமாய்த்தோன்றும்.

*திருவடிகளையுடைய உமாதேவியாரை ஒருபாகமாகவுடைய ஒப்பில்லாதவனே, எனக்கு நீயல்லாமல் வேறொரு துணையுமில்லை. உன்னுடைய பவளம்போன்ற அழகிய திருவாயினாலே "அஞ்சாதே" என்றுநீசொல்லுவதை நான் கேட்க ஆசைப்படுகிறேன், என்பிதாவே!*

*பவளத்திருவாயால் அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன் என் பதிலுள்ள சொற்சுவையையும் பொருட்சுவையையும் அகச்சுவையையும் பார்த்துக் களிகூருக.*

---

# ௩. திருச்சதகம்
## பத்திவைராக்கியவிசித்திரம்.

திருச்சதகம் அந்தாதியான நூறுபாடல்களைக் கொண்ட பத்துத்திருப்பதிகக்கோவை. இதுபத்திவைராக்கியச்சிறப்பைச் சொல்வதென்று பெரியோர் கூறினர். இதின்முதற்பாடலில் பத்தியின் விசித்திரத்தையும், இரண்டாம்பாடலில் வைராக்கியத்தின் விசித்திரத்தையும் சுருக்கமாகச்சொல்லி மற்றையபாடல்களிலே விரித்துச்சொல்லியருளினர். பத்திவிசித்திரம் சொல்லுமிடத்து, மனம் ஒருங்கேசுகசிந்து வழிபடுதலே தக்கவழிபாடென்று காட்டியருளினர்.

*மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென், கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம், பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங், கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.*

*இ—ள்: வாசனைகமழுகின்ற மலர்களால் அருச்சிக்கப்படும் உன்னுடைய திருவடிகளுக்கு என்னுடைய உடல் புளகங்கொண்டும் அன்பினால் நடுநடுங்கியும், கைகள் தலையிலே சேர்ந்தும், கண்கள் ஆனந்தவருவி நிறைந்தும், மனம்*

உருகியும் பொய்யான உலகப்பொருள்களிலே பற்று நீங்கியும், வாய் உன்னைப் பலமுறை துதித்தும் நிற்கும். இந்த வழக்கத்தை நான் தவறவிடேன், என்னையுடையவனே! இப்படியாக நான் என்றும் நடந்துகொள்ளுதற்குக் கிருபாநோக்கஞ் செய்தருளுக.

உயர்ந்த பதவிகளேனும் அதிகாரங்களேனும் வேண்டாமென்றும், அடியார்நட்பும் திருவருட்சிந்தனையுமே வேண்டுமென்றும், சிவபிரானையே வழிபடுவேனென்றும் பின்வரும் பாடலிலே சொல்லியருளுகின்றார்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன்பிறதெய்வம்உன்னையல்லாதெங்களுத்தமனே(உ)

இ—ள்: தேவேந்திரன், விட்டுணு, பிரமா ஆகிய இவர்களுடைய உயர்ந்த பதவியைத் தந்தாலும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்; நான் குடிகெட்டுப்போனாலும் உன்னுடைய அடியவர்களல்லாதாரோடு சேரமாட்டேன்; நரகத்துக்குப்போனாலும், அங்கே உன்னுடைய திருவருளின் வழிப்பட்டு நிற்பேனாயின், அந்த நரகத்தை இழிவான இடமாகக்கருதேன்; எனது தலைவனே, பரம்பொருளே, உன்னையல்லாமல் வேறுதெய்வத்தை எண்ணமாட்டேன்.

இந்தப்பாடலை ஒவ்வொருநாளும் ஓதிவந்தால் உலகத்திலேயுள்ள உயர்ந்தபதவிகளிலே மனஞ்செல்லாது. தேவேந்திரபதவியைத்தந்தாலும் நான் ஏற்கமாட்டேன் என்று சொல்லுபவனுக்குப் பூலோகத்திலேயுள்ள சட்டசபை வாழ்க்கையேனும் அதிகாரஸ்தானங்களேனும் உயர்ந்தபட்டங்கள் முதலியவேனும் பொருளாகமாட்டா. இவைகளிலே மனஞ்செல்லாதாயின் நீதியீனமாகப் பொருள்சம்

பாதிக்கும்விருப்பம் கனவிலும்வராது. நரகத்துக்குப்போனாலும் உன்னுடையஅடியவரல்லாதாரோடு சேரேன்என்றதால், செல்வம் அதிகாரம் முதலியசிறப்புகளைமாத்திரம் உடையவரது சிநேகத்தை விரும்பலாகாதென்பது பெறப்படும். இந்தப்பாடல் உலகஆசைகளைத்தீர்த்தற்கு நல்ல மருந்து.

புறத்துவழிபாடு அடிக்கடிசெய்வதோடு அகத்துவழிபாடு இடையறாதிருக்கவேண்டுமாதலால், அதற்கருள்புரியுமாறு பின் வருந் திருவாசகத்திலே வேண்டுகின்றார்.

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட்டாதடி யேஇறைஞ்சி
இரந்தவெல்லாம்எமக் கேபெற லாம்என் னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. (சு)

இ—ள்: விதிப்படி ஆராய்ந்தெடுக்கப்பட்ட பலவகைப் பூக்களை உன்னுடைய திருவடிகளிலேயிட்டு அவைகளைவணங்குவதினால் வேண்டியவற்றையெல்லாம் பெறலாமென்றகருத்தையுடைய அன்பர்மனத்திலே வெளியாகநிற்கும் கள்வனே, நான் உன்னை இடையறாது வணங்குதற்குஉன்னுடைய திருவடிகளுக்கு என்னுடைய அன்பு எப்போதும் செல்லத்தக்கதாக அனுக்கிரகஞ்செய்,

"கள்வன்" என்பது காதற்பேச்சு. இவ்வாறேசம்பந்தசுவாமிகள் "என்னுள்ளங்கவர்கள்வன்" என்றும், அப்பர்சுவாமிகள் "கள்வன் சேர்கடம்பூர்க்கரக்கோயிலே" என்றும்பாடியருளினர்.

அன்பர்கள் தங்களுக்குவேண்டியவைகளைப் பிறமுயர்ச்சியின்றிக் கடவுள் வழிபாட்டால் மாத்திரம்பெற்றுக் கொள்ளுவார்கள் என்பது "அடியேயிறைஞ்சி" என்பதினுற்காட்டப்பட்டதோர் அரியஉண்மை. இப்படியே, செம்மனச்செல்வியார் கூலியாளைப் பெற்றார்; சுந்தரர் செங்கற்கள்பொன்னாகப்பெற்றார்; அப்பர் நோய் நீங்கப்பெற்றார்.

நாங்கள் பழகிக்கொண்ட பழக்கத்தின் கொடுமையினாலே நாங்கள்பிழையென்றுகாண்பனவற்றையும் செய்வதுண்டு. அப்படியான பிழையைச் செய்ய ஏவப்படும்போது அதினின்றும் நாம் விலகுதற்குப் பெருந்துணையாகவுள்ளது பின்வரும்பாடல்.

*வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்*
*டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே*
*சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்*
*வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.* (உ0)

*இ—ள்: மனமே, உன்னுடையவாழ்க்கை ஒருவாழ்க்கையன்று. கொடியவினைகளிலிருந்து உன்னைக்காப்பவராகிய சிவபிரானை வழிபடாமல் தீவினையாகிய கடலிலேஆழ்கின்றாய். நீயே யுனக்குக் கேட்டைச் சூழ்கின்றாய். இப்படிச் செய்யாதேயென்று நான்உனக்குப்பலமுறையுஞ் சொல்லுகிறேன். நான்சொல்லுவதைக்கேளாமல் துன்பசாகரத்திலே வீழ்ந்து வருந்துகின்றாய்.*

இதற்கு அடுத்ததிருப்பதிகத்திலே, மணிவாசகப்பெருமான் கடவுள் தம்மையாட்கொண்டதிருவருளைவியந்துபாடித்தம்முடைய அன்புக்குறைவைக்கடிந்து சிவபிரானுக்கு முறையிடுகின்றார்.

*வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்*
*பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்*
*பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்*
*பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்*
*குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்*
*உருகாதால் உடம்பெல்லாங் கண்ணா யண்ணா*
*வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாங்*
*கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே.* (உக)

*இ—ள்: கங்காநதியைத்தாங்கிய நீண்ட விரிந்த சடையையுடையவனே என்றும், இடபவாகனனே என்றும் தேவர்பிரானே என்றும் சொல்லக்கேட்டவுடனே உன்*

ளிலே பற்றுநிறைந்த மனமுடையவராய்ப் பள்ளத்திற் பாய்கின்றதண்ணீர்போல மிகவிரைவாக உன்னிடத்திற் சென்று பதைபதைத்துஉருகுகின்ற அடியார்கள்இருக்கத் தக்கதாகத் தகுதியில்லாத என்னை ஆட்கொண்ட உன்னுடைய திருவடிகளை நினைத்து என்னுடைய உடல்முழுவதும், உள்ளங்கால்தொடங்கி உச்சிவரையும், நெஞ்சாகிஉருகுவதும், உடம்புமுழுவதும் கண்ணாகி ஆனந்தவருவிசொரிவதும் முறைமையாகும். இதற்குமாறாக, என்னுடைய நெஞ்சே உருகாமற் கல்லாய்விட்டது; கண்கள் ஆனந்த வருவிசொரியாமல் மரமாயின; நான் அவ்வளவு கொடிய பாவியானேன்.

அடுத்தபதிகத்திலே தம்முடைய பத்திக்குறைவுக்காக மனதைக்கண்டிக்கின்றார்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப், பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர், சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே, தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே. (௩க)

இ—ள்: ஒன்றுஞ் செய்யமாட்டாமற் பிணம்போற் கிடக்கும் நெஞ்சமே, நீ சிவபிரானைநினைத்து ஆனந்தக்கூத்தாடுகின்றிலை, ஐந்தொழில் நடனஞ்செய்யும் சிவபிரானது திருவடிகளில் உனக்குஅன்பில்லை, என்பும் உருகத்தக்கதாக அவரைத் துதிக்கின்றாயில்லை, அவரைநினைத்து உன்னுடையசரீரமும் நடுங்கவில்லை, அவருடையதிருவடிகளை வணங்குகின்றாயில்லை, அவைகளை உன்னுடையதலையிலே சூடுகின்றாயில்லை, அவைகளுக்குப் பூமாலைசூட்டுகின்றாயில்லை, அவைகளைத்தேடிக்காண நினைக்கின்றாயில்லை. அவர் உனக்குக்கிட்டாததை நினைத்துத் தெருக்கடோறும் அலறித் திரிகின்றாயில்லை, உனக்கு வேறொருதுணையு மில்லையே! இதற்கென்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை.

திருச்சதகத்தின் கடைசிப்பகுதியிலே, கடவுளை உண்மையானபடிவழிபட மனதாலும்முடியாது, ஆன்மாவாலும் முடியாது, அவருடைய பேரருள்பெற்றே அவரை வழிபடல்கூடும் என்று பாடியருளுகின்றார்.

*யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்*
*ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே*
*தேனே அமுதமே கரும்பின் தெளிவே தித்திக்கும்*
*மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.* (கூ0)

*இ—ள்: (நீயே மெய்ப்பொருள்) ஆதலால் நான் பொய்யானபொருள், ஆதலால் என்னுடைய மனமும் பொய், என்னுடைய அன்பும் பொய்; இவ்வாறுதலால், தீவினையேன் அழுவதினாலே உன்னையடையலாமோ? தேனையும் அமிர்தத்தையும் கருப்பஞ்சாற்றையும்போல இனியபரம்பொருளே, அடியேன் உன்னைவந்துசேரும்வகையை அருளிச்செய்.*

---

## ச. நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்சவைராக்கியம்.

இதிலே மாணிக்கவாசகசுவாமிகள் உலகப்பற்றுக்கெடுதற்காகச் சிவபெருமானுடைய திருவடிப்பற்றை * யாசித்துப்பாடியருளுகின்றார்:—

உலகப்பொருள்களில் உண்டாகும்மயக்கம் இலகுவிலே தீராதென்றும், அந்தமயக்கத்தினாலே சிவபிரானுடைய திருவருளை மூன்றுமுறை அவமதிக்கநேர்ந்ததென்றும் இத்திருப்பாடலிலே சொல்லியருளுகின்றார்.

*செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்*
*விழுகின்ற என்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகால்*

---

* *பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.* —*திருக்குறள்.*

*உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே*
*வழிநின் று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.* (ரு)

*இ—ள்: தேனைப்பருகும் வண்டுகள் குடைகின்றமலர் மாலையை அணிந்த திருமுடியையுடைய திருஉத்தரகோச மங்கைக்கிறைவனே, விட்டிற்பூச்சியானது விளக்கொளி யைக்கண்டு மயங்கி, அதுதனக்கு இனிமையானதென்று நினைத்து, அதிலேபோய்விழும். அப்படிவிழுகின்றபோது நெருப்பு அதைச்சுடும். அந்தவேதனையினால் அது அந்த விளக்கொளியை விட்டு அகன்று தூரத்திற்குப்போகும். அங்கேநின்று பின்பு அந்த விளக்கொளியைப் பார்க்கும் போது அதன் அழகினால் அது மயங்கி, முன் பட்ட வேதனையை மறந்து, பின்னும் அதிலேபோய்விழும். அது போலச் சிற்றின்பங்களை இனியவையாக நினைத்து, அவை களை அனுபவிக்கப்போய் வேதனைப்பட்டு, பின்பு அந்த வேதனையைமறந்து, மீண்டும் அவைகளிலே அழுந்தி வருந்துகின்ற என்னைக்கைவிடாதே. வழிநடையாற்களைத் துப் பசித்துத் தளர்ந்திருக்கின்றனென்று பரிந்து நீ தேவா மிர்தத்தைக் கொடுக்கும்போது, அதை வேண்டாமென்று தள்ளும் மூர்க்கனுண்டா? ஆம். நான் அப்படிப்பட்ட மூர்க்கன்தான். நான் இந்த உலகவேதனைகளுக்காற்றாமல் வருந்திக்களரும் வழியிலே, அந்தவருத்தத்தைத் தீர்த்துப் பேரானந்தத்தைத் தரத்தக்க உன்னுடைய திருவருளா கிய அமிர்தத்தை நீதர, எனக்கு அதுவேண்டாமென்று அதைத் தள்ளிவிட்டேனே!*

வேறொருபாட்டிலே, உலகவேதனைகள் தாக்கும்போது, அவைகளைத் தீர்க்கத்தக்க மருந்தாகிய திருவருள் எங்குமிருக்கவும், அதையுணராமல் நின்று நாம் வருந்துவதைக் காட்டியருளுகின்றார்.

*வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்றுத்*
*துன்பத்தின் நின்றும், விள்ளக்கி லேனை விடுதிகண்டாய்*

விரும்பும்அடியார், உள்ளத்துள் ளாய்மன்னு முத்தரகோச மங்கைக்கரசே, கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே. (கச)

இ—ள்: நல்லநீர்நிறைந்த ஆற்றின்நடுவில் நின்று கொண்டும் தனதுதாகத்தைத்தீர்க்காத மூர்க்கனைப்போல, உன்னுடைய திருவருளை நான்பெறத்தக்கதாகவும் அதைப் பருகி என்னுடைய துன்பத்தைத்தீர்க்காமல் வருந்து கின்றமூடனாகிய என்னைக்கைவிடுகின்றாயோ? அன்போடு வேண்டுபவர்களுடைய மனதிலே வீற்றிருப்பவனே, திரு உத்தரகோசமங்கைக்கிறையவனே, மயக்கம்பொருந்தியமன த்தையுடைய எனக்கு நிரதிசய ஆனந்தத்தைத்தந்தருளுக.

திருவருளாகிய துணையைப் பற்றிக்கொள்ளாததினால் வரு கின்ற துன்பத்தை ஓர் உவமானத்தினால் சுவாமிகள்விளக்கியருளு கின்றார்.

கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேஅனல் காலொடப் பானவனே. (உ0)

இ—ள்: ஒரு கொம்பைப்பற்றாத கொடியானது அடிக் கிறகாற்றிற்கெல்லாம் ஆடியலைந்து வருந்துவதுபோல, உன்னுடைய திருவருளாகிய பிடியில்லாமையினாலே உலக வின்பங்களிலே மோதப்பட்டு வருந்துகின்றேன். சுந்தர ரூபனே, இப்படிவருந்துகின்றஎன்னை நீ கைவிடுவாயோ? தேவர்களும் அடைதற்கரிய சிவலோகத்திலே எழுந்தருளி யிருப்பவனே; திருஉத்தரகோசமங்கைக்கடவுளே; ஐம் பெரும்பூதங்களாய் விளங்குபவனே.

அகந்தையால்வரும் மயக்கமானது மயக்கங்களுட் கொடிய தென்பதைப் பாடியருளுகின்றார்.

*தனித்துணை நீநிற்க யான்றருக் கித்தலை யானடந்த, வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய, மனத்துணை யேயென்றன் வாழ்முத லேயெனக் கெய்ப்பில் வைப்பே, தினைத்துணை யேனும் பொறேனென் துய ராக்கை யின் திண்வலையே.* (௩௯)

*இ—ள்: எனக்கு நீயல்லாமல் உள்ளபடிவேறுதுணை யில்லை; அப்படியாகவும், என்னுடையசெருக்கினாலே நான் தலைகீழாகநடந்து செய்யுந்தொழிலையே எனக்குத் துணையாகக்கொண்டேன். நான் உய்வதெப்படி? என்னைநீ கைவிடுவாயோ? தீவினைசெய்வேனது உயிர்த்துணையாய்நிற்பவனே, என்னுடைய நல்வாழ்க்கைக்கு முதற்பொருளாயிருப்பவனே, என்னுடைய குறையாதசெல்வமே, துன்பத்துக்கிடமான இந்த உடம்பாகிய வலையிலகப்பட்டிருக்கிறேன். இதனால் வருந் துயரத்தைச் சற்றேனும் பொறுக்கமாட்டேன்.*

*ஆக்கையென்றது தூலசூக்கும சரீரம் இரண்டையும். உடம்பிலே பலமும் உற்சாகமும் இருக்கும்போது ஒருவன் தன்னுடைய உடம்பைக்கொண்டு அரியசெயல்களைச் செய்யலாமென்றெண்ணி மயங்குகின்றான். தீவிரவிவேகமும் நிறைந்த கல்வியறிவும் உடையவன் இவைகளைக்கொண்டு தான் எதையுஞ் சாதிக்கலாமென்றெண்ணுகிறான். ஆயினும், அற்பநோய்வந்தவுடனே இந்த வீரங்களெல்லாம் அற்றுப்போகின்றன. அன்றியும் இந்தச்சரீர பலத்தையுங் கூர்ந்த புத்தியையுங்கொண்டு ஒருவன் தனக்குப் பெருந்தீமையானவைகளையுஞ் சம்பாதிப்பான். சிவபிரானைத்துணையென்றுநினைத்தால் அன்பும் இன்பும் அவனில்நிறைந்து ஒருகுறைவுமின்றி வாழ்வான். ஆதலால் தன்னுடைய சரீரபலத்தையும் அறிவாற்றலையுந் துணையாகக்கொண்டு கடவுளைமறப்பவன் தலையால் நடப்பவனேயாவன்.*

*அறம்செய்தற்குக்கிடைத்த ஆக்கையானது அகந்தைக்கும் தீவினைக்குஞ் சாதனமாகும்போது சகல தீமைகளையும் விளைத்தலால் வலையெனப் பட்டது.*

அன்புமிகுந்த நேரங்களிலே சிறுகுழந்தைகள் தாய் தந்தையருடைய உடம்பைவறுகியுங் கடித்தும், அச்சுறுத்தியும் இன்புறுவதுபோல, மணிவாசகப்பெருமான் அன்புமிகுதியாற்சிவபிரானை அச்சுறுத்துகின்றர். "என்னைக்கைவிட்டால்உன்னைப்பழிப்பேன்" என்கிறர். அந்தப்பழிப்பே பெருந் துதியாகின்றது.

*தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்*
*வீரஎன் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார்*
*ஆரடி யான்என்னின் உத்தர கோசமங் கைக்கரசின்*
*சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே.* (சஅ)

*இ—ள்: நட்சத்திரங்கள்போல் விளங்குகின்ற தலையோடுகளாலாக்கப்பட்ட மாலையையுங் கொடியபாம்பையுந் திருமுடியிலேதரித்திருக்கும் வீரனே, நீஎன்னைக் கைவிடப் போகின்றுயோ? நீ என்னைக்கைவிட்டால், பெரியோர்கள் "நீ யாருடையஅடியான்" என்று என்னைக்கேட்கும்போது நான் திருஉத்தரகோசமங்கைக்கிறையவனுகிய சிவபிரானுடைய மெய்யடியார்களுடைய அடியவன் என்று சொல்லுவேன். சொன்னுல் கீழோனுகியஎன்னை அடியார்க்கடியனுக ஏற்றுக்கொண்ட உன்னுடைய அறியாமையைநினைத்துப் பெரியோர்கள் நகைத்து உன்னை அவமதிப்பார்கள்.*

---

# ரு. திருவெம்பாவை முதலியவை.

இந்தப்பதிகங்கள் பெண்கள் ஒருவரோடொருவர் பேசுவனவாகப் பாடப்பட்டவை இவற்றுள், திருவெம்பாவை பெண்கள் மார்கழிமாரத்திலே தங்கள்நட்பினரை நித்திரைவிட்டெழுப்புவதாகப் பாடியவை. திருப்பொற்சுண்ணம் ஸ்நானத்திற்காக இடிக்கப்படும் ஒருவிதப்பொடி. பூவல்லியென்பது அல்லிப்பூக்களைப் பறித்தல். மற்றையவைகள் மகளிர் விளையாட்டுகள்.

# திருவெம்பாவை

## சத்தியைவியந்தது.

---

திருவெம்பாவையிலே நவசத்திகளும் * பராசத்தியை வியக்கின்றனர். முதலாவது மனோன்மணி பராசத்தியை வியந்து சர்வபூததமனியை எழுப்புகின்றது.

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்*
*மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்*
*மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து*
*போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்*
*ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே*
*ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்* (க)

இ—ள்: *முதலும் ஈறும்இல்லாதவரும் அறிதற்கரியவரும் அளவிறந்தவரும் ஞானசோதியுமாகிய சிவபிரானைத் துதித்து நாம்பாடிய பாடல்களைக்கேட்டும், நீ பின்னும் நித்திரையாகின்றாயோ? ஒளிபொருந்திய விசாலித்த கண்களையுடைய பெண்ணே, உன்னுடைய செவிகள் வன்செவிகளோ? வேறொரு பெண் வீதியிலே சிவபிரானுடைய திருவடிகளைத் துதித்துப்பாடிய தோத்திரங்களைக்கேட்டு அன்புபெருகி விம்மி விம்மி யழுது தன்னுடம்பை மறந்து தன்னுடைய பூம்படுக்கையிலிருந்து புரண்டு வீழ்ந்து தன்னைப் பொருளாக எண்ணாமற் கீழேகிடந்தாள். என்னுடைய தோழியாகிய உன்னுடைய குணமிதுவா? என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!!*

இப்படிப் பலவாறாகப் பராசத்தியை வியந்து பாடியபின்பு *சிவபிரானை ஒருவரம் கேட்கின்றார்.*

---

* நவசத்திகளாவன மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகாணி, கலவிகாணி, காளி, ரௌத்திரி, சேட்டை வாமை.

உங்கையிற் பிள்ளை உனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன் றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர்எம்பாவாய்.(கக)

இ—ள்: உன்னுடையகையிலிருக்கும் பிள்ளையைநீயே காக்கவேண்டும் என்றபழமொழியை இப்போது புதிதாக எடுத்துக்காட்டுவது தவறுதலால், அதற்கஞ்சி எம்பெருமானாகிய உனக்கு ஒன்றுசொல்லப்போகிறோம்; அதைக் கேட்டருளுக. நாங்கள் உன்னுடைய அடியார்களோடன்றி மற்றவர்களோடுகூடாதொழிய அருளுக. எங்களுடையகைகள் உன்னுடைய திருத்தொண்டல்லாது வேறொன்றையும் செய்யாதுவிடுக. எங்களுடைய கண்கள் இரவிலேனும் பகலிலேனும் உன்னைத்தவிர வேறொன்றையுங் காணாதிருக்க. எமது தலைவனாகிய நீ இந்தவரத்தை எங்களுக்குத்தருவாயானால், சூரியன் கிழக்கே உதித்தாலென்ன மேற்கே உதித்தாலென்ன? நாங்கள் ஒன்றையும் பொருட்படுத்தேம்.

---

# திருவம்மானை

## ஆனந்தக்களிப்பு.

---

திருவம்மானையின் பொருள் ஆனந்தக்களிப்பென்று பெரியோர் கூறினர். சிவபிரான் மனதை உருக்கி அன்பை வளர்த்துப் பேரானந்தத்தைக் கொடுத்துப் பொருள் செய்ததைப் பின்வரும் பாடல்களிலே காண்க.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லைநகர் புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். (ரு)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார்மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவாபாடுதுங்காண் அம்மானாய். (சு)

இ—ள்: கற்கவேண்டியவற்றைக் கல்லாதவனாய்ப் புல்லிய நிலையில்நின்ற என்னை அழகிய திருப்பெருந்துறையிலெழுந்தருளிய ஈசன் வலிந்துபிடித்து மயக்கி* என்மனமாகிய கல்லைப்பிசைந்து கனியச்செய்து தன்னுடையகருணை வெள்ளத்திலே யமிழ்த்தி என்னுடைய வினையையொழித்த பரமாசாரியனாகும். தில்லைநகர்க்குச்சென்று திருவம்பலத்தில் வீற்றிருக்கும் இடபவாகனனும் இவனே. இவனைப் புகழ்ந்து பாடுவோம்.

தோழீ, என்னை ஒருவன் ஏய்த்துக்கொண்டுபோய்த் தன்வசப்படுத்திய சம்பவத்தைக் கேள்விப்பட்டாயோ? சித்திரங்கள் தீட்டிய மதில்களாற் சூழப்பட்ட அழகிய திருப்பெருந்துறையிலிருக்குமவன், காட்டத்தகாதவைகளையெல்லாம்எனக்குக்காட்டி, சிவத்தன்மையைக்காட்டி, திருவடித்தாமரைகளைக்காட்டி, தன்னுடையதிருவருளாகியதேனின் சுவையைக்காட்டி ஊரவர்கள் என்னைப்பார்த்து நகைக்கவும்

*மயங்குதல்-பரவசப்படுத்தல், ஒருவர்தம்மறிவின்றி, ஒரு பொருளிற் பெருங்காதல்கொள்ளுதல்.

நான் பரமுத்தியை யடையவும் என்னையாட்கொண்டருளிய விதத்தைப் புகழ்ந்துபாடுவோம்.

"நாட்டார் நகைசெய்ய நாம் மேலைவீடெய்த" என்பதில் நாட்டாருடைய நகையினிழிவும் பேதைமையுங் காட்டப்பட்டன. அவர்களுடையநகையைப் பொருட்படுத்தலாகாதென்பது குறிப்பு. போற்றித்திருவகவலில் இது தெளிவாகச் சொல்லப்பட்டது:-- "நாடவர் பழித்துரை பூணதுவாகக் கோணுதலின்றி." இதுலௌகிகர்களாகிய எங்களுக்கும் ஓர் அவசியமானபோதனை. நல்லகாரியங்கள் செய்யும்போது நாடவர் பழிப்பது இயல்பு. அந்தப்பழிப்பைக்கண்டு அந்த நல்லகாரியத்தைக் கைவிடுபவர் பலர். மதுபானிகளல்லாதவர் மதுபானிகளோடு வாசம்பண்ணும்போது அவர்களுடைய பழிப்புக்கஞ்சி மதுபானியாகின்றனர். நம்முடைய செயல் நல்லதோ தீயதோ என்று யோசிப்பதேயன்றி மற்றவர்கள் நம்முடைய செயலைப் பார்த்துச் சிரிப்பார்களேயென்று கருதுவது பேதைமையேயன்றி அயோக்கியமாகவும் முடியும். நம்முடைய நற்செய்கையைக் கைவிடாமல் நின்றால், இன்றைக்குச் சிரிப்பவர்கள் நாளைக்கு எங்களோடு சேருவார்கள். இதனாலே நாமும் அவர்களும் நன்மையை அடையலாம்.

---

# திருப்பொற்சுண்ணம்

## ஆநந்தமனோலயம்.

திருப்பொற்சுண்ணத்திலே மனம் ஆனந்தத்திலே லயப்படுந் தன்மை சொல்லப்படுகிறது. அந்த ஆநந்தம் கருப்பஞ்சாற்றிற்கும், சர்க்கரைப்பாகுக்கும், தேனுக்கும், பழச்சாற்றிற்கும் ஒப்பிடப்படுகின்றது.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல

கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே. (௧௨)

இ—ள்: குவளை மலரையொத்த விசாலித்த கண்களை யுடைய அழகியமாதர்களே, கருப்பஞ்சாற்றையும், சர்க்கரைப் பாகையும், சுவைகுறையாததேனையும், இனிய பழங்களின் ரசத்தையும் ஒத்த ஞானனந்தவடிவினரும், பெறுதற்கரிய களிப்பையுண்டாக்குபவரும் எமதுதலைவரும் எங்களுடைய பிறப்பைஅறுத்துஎம்மைஅடிமைகொண்டருளியவருமாகிய நடராசப்பெருமானை நாத்தழும்பேற இடைவிடாமல் துதித்துப் பாராட்டிக்கொண்டு திருப்பொற்சுண்ணத்தை இடிப்போம்.

---

# திருத்தெள்ளேணம்

## சிவனோடடைவு.

---

திருத்தெள்ளேணம் சிவபெருமானையடைந்த நிலையைவிளக்குவது. அந்த நிலையிலே உலகப்பற்றுகளெல்லாம் நீங்கி "நான்" என்பதும் "என்னுயிர்" என்பதும் "என்செயல்" என்பதும் கெட்டு, யாவும் சிவமாயே தோன்றும்.

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ. (௧௧)

இ—ள்: கயல்போன்ற அழகிய கண்களையுடைய உமாதேவியாரைத் தம்முடைய பாகத்திலேயுடைய சிவபிரான் என்னைச்சேர்ந்து ஆட்கொண்டருளியவுடனே, பக்கத்திலே

யுள்ளவர்களுடைய பற்றுக்கெட்டு, அரியவினைத்தொடர்பால் வந்த சுற்றத்தார்கள் மனதினின்றும் நீங்கிப், பூலோகத்தி லுள்ள பொருள்களிலுள்ள ஆசைகளுமழிந்து, சிவமல்லாத சொற்களையுமறந்து என்செயல் என்பதும் அற்றுப்போன விதத்தைப்பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

"மயல்மாண்டு" "வாசகம்மாண்டு" "செயல்மாண்டு" என்ப தினல் மனம் வாக்குக்காயம் ஆகிய முக்கருவிகளுஞ் சுத்தியடைந் தமை சொல்லப்பட்டது.

வான்கெட்டு மாருதம்மாய்ந் (து) அழல் நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

இ—ள்: ஆகாசம் முதலிய ஐம்பூதங்கள் அழியுங் காலத்தும் தனக்கு அழிவில்லாதவரும், ஒருவிதமான வேறு பாடு அடையாதவருமாகிய சிவபிரானுக்காக என்னுடைய உடல் உயிர் உணர்வு எண்ணம் ஆகிய இவைகள் மறைந்தன வேயன்றி, நான்என்பதும் மறைந்துபோனதைப்பற்றிப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

என்னுடல் முதலியவைபோதலால் மமதைகெட்டதும் "நான்" கெட்டதினல் அகந்தை கெட்டதும்பெறப்படும். அகந்தை மமதை கெடுதல் ஆணவங்கெடுதலுக்கடையாளமாம். இந்தநிலையை

"புலனடக்கித் தம்முதற்கட்புக்குறுவார் போதார்
தலநடக்கும் ஆமைதக" என்னும் உமாபதி சிவத்தின் திரு வாக்கிலே காண்க.

---

# திருச்சாழல்

## சிவனுடைய காருணியம்.

---

திருச்சாழலிலே புத்தன்கேட்ட வினக்களும் ஊமைப்பெண் சொன்ன விடையுங் கூறப்பட்டிருக்கின்றன. அந்தவிடைகளில்

லாம் சிவபெருமானுடைய காருண்ணியத்தை விளக்கும். அந்த வினக்களுளொன்று சிவபெருமான் உமாதேவியாரை ஏன் மணஞ் செய்தார் என்பது:-

*மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை*
*உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ*
*உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்*
*கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ.*

இ—ள்: வினு:- *மலையரசனால் வளர்க்கப்பட்டவளும் பொற்பாவைபோன்றவளும் ஒளிபொருந்திய நெற்றியையுடையவளும் அழகியவளுமாகிய உமாதேவியைச் சிவபெருமான் உலகறியத் திருமணம் செய்தாரென்பதென்ன?*

விடை:- *சிவபெருமான் உமாதேவியாரை உலகறிய விவாகம் செய்யாவிட்டால் வேதாகமங்களிற் சொல்லப்பட்ட உண்மைகளெல்லாந் தவறிவிடும்.*

வேதாகமங்களிற் சொல்லிய உண்மைகள் எவையென்றல்:-

*"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி*
*பின்னமிலான் எங்கள்பிரான்."*

*சிவபிரானுடைய திருவருட்சத்தியாகிய உமாதேவியார் ஆன்மாக்கள் யாவற்றையும்(ஐந்தொழில்செய்து)சிவத்தன்மையையடையச்செய்வர். சர்வசங்காரத்தின்பின் அந்த அருட்சத்தி ஐந்தொழில் செய்வதற்கு வெளிப்படுவதே சிவபிரானுடைய திருமணமெனப்படுவது. அந்தத்திருமணமில்லையாயின் ஐந்தொழில் இல்லையாகும். சிவபெருமான் ஆன்மாக்களை முத்தியடையச்செய்வாரென்னும் சாத்திர உண்மைதடுமாறும்.* *

---

* இத்திருச்சாழலில் ஒன்பதாம்பாட்டில் நான்காம்வரிக்கு "வாழுதற்குப் புவனபோகமின்றி அந்தரப்பட்டு ஆணவத்தோடு மாத்திரம் சேர்ந்துநிற்கிற" கேவலநிலையையடைந்து கெட்டுப் பேரவார்கள் என்று பொருள்கொள்ளுக.

# திருப்பூவல்லி

## மாயாவிசயம் நீக்குதல்.

திருப்பூவல்லியிலே ஆன்மாவானது மாயைப்பொருள்களின் ஆட்சியினின்றும் நீங்கி அவைகளை ஆளும்முறைமை கூறப்படுகிறது. அதில் ஒருமுறை பின்வருமாறு:-

*வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்(து)*
*இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்*
*அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற*
*குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.* (எ)

*இ—ள்: வணங்குதற்குத் தலையையும் துதித்தற்கு வாயையும் கூடுதற்குத் தன்னுடைய மெய்யன்பருடைய கூட்டத்தையும் எனக்குத் தந்தருளி எம்பெருமான் உமாதேவியாரோடு அழகிய தில்லையம்பலத்திலே ஐந்தொழில் நடனஞ்செய்யுந் திருவருட்டிறத்தை நன்றாகப்பாடி அல்லி மலரைப்பறிப்போம்.*

இப்படியே, அப்பர் சுவாமிகள்
*"வாழ்த்தவாயும் நினைக்கமடநெஞ்சும்*
*தாழ்த்தச்சென்னியும் தந்ததலைவன்"* என்றுபாடியருளினர்.

---

# திருவுந்தியார்

## ஞானவெற்றி.

திருவுந்தியாரிலே முப்புரங்களை யெரித்தமையும் தக்கனுடைய யாகத்தை அழித்தமையும் இராவணனுடைய அகந்தையை நீக்கினமையும் ஞானத்தின் வெற்றியாகக் கூறப்படுகின்றன. முப்புரங்களை யழித்தமை மும்மலங்களைவென்ற ஞானவெற்றியாம்.

இராவணனையும் தக்கனையும் வென்றமை அகந்தை மமதைகளை வென்றமையாம். தக்கன் தானே யாகாதிபதியாகாமல் தன்னவராகிய விஷ்ணுவை யாகாதிபதியாக்கியது மமதையாகும்.

இவற்றுள் முப்புரங்களை யழித்தமை பின்வருமாறு:—

*ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்*
*ஓரம்பே முப்புரம் உந்தீபற*
*ஒன்றும் பெருமிகை உந்தீபற.* (௨)

*இ—ள்: திருவேகம்பத்திற்கு இறைவராகிய சிவபிரானது திருக்கரத்திலே இரண்டு அம்புகள் இருக்கவில்லை. முப்புரங்களை எரித்தற்கு ஒரு அம்புதானிருந்தது. அந்த ஒரு அம்பும் மிகையாய்விட்டது.*

*சிவபிரானது திருநகையினலே திரிபுரங்கள் சாம்பரானமையால் அம்பு தேவையில்லாமற்போயது. இதனலே சிவபிரான் ஒரு கருவியுமின்றித் திருவருளால்மாத்திரம் மும்மலங்களையும் போக்குகின்ருர் என்பது பெறப்படும்.*

---

# திருத்தோணேக்கம்

## *பிரபஞ்சசுத்தி.*

திருத்தோணேக்கத்திலே ஆன்மாக்கள் யாவும் பேரன்பினுற் சுத்தியடையும் முறைமை கூறப்படுகின்றது. இதற்கு இலக்கியமாகப் பேரன்புடையவராகிய கண்ணப்பநாயனுர் காட்டப்படுகின்றனர்.

பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனர் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருள்பெற்று நின்றவா தோணேக்கம் ஆடாமோ. (௩)

இ—ள்: பூசைத்திரவியங்கள் யாவற்றையும் ஒருங்கே சம்பாதித்துச் செய்யப்படும் சிவபூசைகள்போல விளங்கத் தக்கதாக, கண்ணப்பநாயனாரது செருப்பணிந்த சிறந்த திருவடிகளையும் வாயிலேகொண்டுபோன திருமஞ்சனநீரையும் இறைச்சியாகிய நைவேத்தியத்தையும் உவந்து ஏற்று அந்தவேடனார் வீட்டின்பத்தை அறியவும் அவருடைய உடல் ஆணவத்தாபம் நீங்கிக் குளிர்ச்சியடையவும் அருள் செய்த தன்மையைப் புகழ்ந்து தோணோக்கமாடுவோம்.

---

# திருப்பொன்னூசல்

## அருட்சுத்தி.

---

திருப்பொன்னூசல் ஆன்மா மலம்நீங்கித் திருவருளோடு சேர்ந்து சுத்திபெறுவதை விளக்கும். அந்தத்திருவருளாகிய திருவடியைச் சிவபிரான் நமக்கு உறைவிடமாகத்தந்தாரென்பதை முதற்பாட்டிற் பாடுகின்றார்.

*சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக*
*ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து*
*நாரா யணன்அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்*
*கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை*
*ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்*
*போரார்வேற்கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.*

இ—ள்: சிறப்புப்பொருந்திய பவளக்காலையும் முத்துமாலைக்கயிற்றையும் அழகிய பொற்பலகையையுங்கொண்ட ஊஞ்சலிலேறி மகிழ்ச்சியோடிருந்துகொண்டு மகாவிஷ்ணுமூர்த்தியுமறியமாட்டாத புதியமலர்களைப்போன்ற திருவடிகளை நாய்போற்கடைப்பட்டேனுக்கு ஊராகத்தந்தருளிய உத்தரகோசமங்கையில் எழுந்தருளிய தெவிட்டாத அமிர்தம்போன்றவரது திருவருளாகிய திருவடிகளைப்பாடிப்

பொன்னூசலாடுவோம்! போர்த்தொழிற்குரிய வேலை யொத்தகண்களையுடையபெண்களே.

"தருவாயெனக்குன்றிருவடிக் கீழோர்தலைமறவே" என்றார் அப்பர்சுவாமிகள்.

---

# திருக்கோத்தும்பி முதலியவை.

திருக்கோத்தும்பி, குயிற்பத்து, திருத்தசாங்கம் ஆகிய மூன்றும் தும்பி, குயில், கிளியாகிய பறவைகளைவிளித்துச் சொல்வதுபோலவும், அன்னைப்பத்து அன்னையைவிளித்துச் சொல்வதுபோலவும்பாடப்பட்டன. திருக்கோத்தும்பிஒழிந்த மூன்றுபதிகங்களிலும் சுவாமிகள் தம்மை ஆன்மாவாகக் கண்டு பெண்ணாகப்பாவித்துப் பாடியருளுகின்றார். இவற்றுள், திருக்கோத்தும்பியில் ஆன்மா சிவபிரானுடைய திருவடியாகிய மெய்ஞ்ஞானத்தையடைந்து அதனோடு ஒன்றாகும் முறைமையுணர்த்தப்படுகின்றது. இங்கே திருவடியை மலருக்கும், அதையடைந்து ஐக்கியப்படும் ஆன்மாவைத் தும்பிக்கும் உவமித்திருக்கின்றார். அன்னைப்பத்து ஆத்தும பூரணத்தையும், குயிற்பத்து ஆத்தும இரக்கத்யையும், திருத்தசாங்கம் ஆத்துமாவை அடிமைகொண்ட முறைமையையும் கூறுவன. தசாங்கம் என்பது (தச அங்கம்) பத்து அங்கங்கள். அவையாவன:— பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, புரவி, படை, முரசு, மாலை, கொடி.

---

# திருக்கோத்தும்பி
## சிவனோடைக்கியம்.

திருக்கோத்தும்பியிலே ஒருபாட்டிலே சிவபிரான் தாமாகவந்து ஆன்மாவை ஆட்கொள்ளாவிட்டால் அந்த ஆன்மா

வும், அதன் அறிவும், விவேகமும், பாழாய்விடும். அஃதாவது "பொய்மையிலே கிடந்துழலும்" என்று பாடியருளுகின்றார்.

நானார்என் னுள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ. (உ)

இ—ள்: தேவாதிதேவராகிய சிவபெருமான் வலிய வந்து என்னை ஆட்கொள்ளாவிட்டால் நான் மதிமயங்கி என்னுடையநிலை இன்னதென்று அறியாமலிருப்பேன். மனம் பொய்யானவைகளையே பற்றும்; என்னுடைய அறிவு பொய்யறிவாயே இருக்கும்; நான் யாரென்பதை அறியமாட்டேன். ஆதலால், ஊன்பொருந்திய தலையோட்டிலேபிச்சை வாங்கித்தின்று திருவிளையாடல்கள் செயும் சிவபெருமானது தேன்பொருந்திய தாமரைமலரையொத்த திருவடிகளுக்குப்போய் ஊதுவாயாக, அரசவண்டே.

நாங்கள் மெய்ப்பொருளாகிய கடவுளை மறந்து நிலையற்றவைகளாகிய உடலையும் உலக இன்பங்களையுமே மெய்யென்றெண்ணி மாய்கின்றோம். சிவபிரானுடைய திருவடியை அடைந்தால் உண்மையான வாழ்க்கையை அடைவோம் என்பது தாற்பரியம்.

இப்படியாக எல்லையில்லாத நன்மையைத்தரக்தக்க பரம்பொருளை நாம்மறந்து அற்பமகிழ்ச்சியைத்தரும் பொருட்களைத் தேடி அலையும் பேதைமையை மணிவாசகப்பெருமான் உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பின்வரும் திருவாசகத்திலே காட்டியருளுகின்றார். இந்தத்திருவாசகம் அதியற்புதமான இனியமருந்து. யோசித்துப்பார்ப்பவர்கள் எவரையுந்தீவினையினின்றும் நீக்கி நேரே சிவபுண்ணியத்துக்குச் செலுத்தத்தக்கது.

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்

அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடைய யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௩)

இ—ள்: அரசவண்டே, நீ பூவிலேயிருக்கின்ற தினையளவுதேனை யுண்ணப்போகாமல், நினைக்குந்தோறுங்காணுந்தோறும் பேசுந்தோறும் எந்தநேரத்திலும் எலும்பைத்தானும் உருக்கத்தக்க ஆனந்தமான தேன்மாரியைப் பொழிந்துகொண்டிருக்கும் கூத்தனிடம்போய் ஊதி அந்தத்தேனெல்லாவற்றையும் பருகுவாயாக.

ஒரு உலகஇன்பத்தைப்பெறுதற்காக நாங்கள் பெருமுயற்சிசெய்கின்றோம். அந்தஇன்பமோவென்றால்மிகவற்பமானது; ஐம்பொறிகளில் ஏதாயினுமொன்றைத் திருப்திசெய்யத்தக்கது; அநுபவித்துமுடிய அதனுடைய நயம்கெட்டுப்போம். கடவுளை வழிபடுவதனால் வரும்இன்பமோவென்றால் எல்லையில்லாதது. அவரை நினைத்தாலுமின்பம். அவருடைய திருஉருவங்களைக்கண்டாலுமின்பம். அவருடைய திருநாமத்தைச் சொன்னாலுமின்பம். அதற்குப்பின்னுமின்பம். அவ்வின்பமும் ஒருபொறிக்குமாத்திரம் உரியதல்ல. எல்லாப் பொறிகளையும் மனத்தையும் உடம்பிலுள்ள எலும்பையும் உருக்கத்தக்கது. இந்த இருவகையான இன்பங்களுள் எதை நீ இச்சிக்கவேண்டுமென்று யோசித்துப்பார், என்பது கருத்தாம்.

இந்தத்திருப்பாடலிலே, முதற்படியாக உலக இன்பத்தைத் தினையளவு தேனுக்கும், முத்தியின்பத்தைத் தேன்மாரிக்கும் ஒப்பிட்டு, உலக இன்பத்தின் சிறுமையை விளக்கி அதைவிட்டுத் தள்ளவேண்டுமென்று கூறியருளி, வருஞ்செய்யுளிலே இரண்டாம் படியாக உலக இன்பம் தோற்றத்தளவில் இன்பமன்றி யுள்ளபடி இன்பமன்றென்று பாடியருளுகின்றார். அப்படியாயின் அதை விலக்குவது இரட்டை நியாயமாக அத்தியாவசியமென்பது பெறப்படும்.

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
அய்யாஎன் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. (௧௭)

இ—ள்: பொய்யான இன்பங்களைத் தருவனவாகிய பொருள்களை அடைந்து அவைகளுடைய அநுபவத்தில் நித்தியமும் அழுந்திக்கிடந்து அவைகளை மெய்யான இன்பங்களென்று மயங்கி வருந்தின என்னை அடியானைக் கொண்ட தலைவனே, என்உயிரே, ஐந்தொழில் நடனஞ் செய்பவனே, என்று சொல்லிச்சொல்லி அவனுடைய திருவடிகளாகிய அழகிய மலர்களை அடைந்து பாடுவாய், அரசவண்டே.

# குயிற்பத்து

## ஆத்தும இரக்கம்.

ஆத்தும இரக்கத்துக்கு உதாரணமாக இராவணனுடைய மனைவி வண்டோதரிக்குச் சிவபிரானிரங்கியமை பாராட்டப்படுகின்றது.

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாம்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோதரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய். (௨)

இ—ள்: குயிலே, அழகுபொருந்திய ஏழுலகத்தவரும் துதிக்க எல்லாஉருவமும் தன்னுருவ மானவரும், கடல் சூழ்ந்த அழகிய இலங்கையில் அழகுசிறந்துவாழ்ந்த வண்டோதரிக்குப்பேரருளினாலே முத்தியின்பத்தைக் கொடுத்தவரும், திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவரும், சிறப்புப்பொருந்திய பாண்டிநாட்டைச் சிவலோகமாக்கிய

வருமாகிய சிவபிரானை உன்னுடைய சிறந்தவாயினலே கூவி யழைப்பாயாக.

வண்டோதரியம்மையாருக்குப் பேரருளீந்ததுபோல எனக்கும் அருள்செய்வார்; ஆதலால் அவரை அழை என்பதுகருத்து.

# திருத்தசாங்கம்

## அடிமைகொண்ட முறைமை.

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு. (ச)

இ—ள்: சிவந்த வாயையும் பச்சைநிறம்பொருந்திய சிறகையுமுடைய செல்வவதியாகிய கிளியே, எங்களுடைய மனத்திலே வீற்றிருக்கும் திருப்பெருந்துறையானுடைய ஆறு எது என்று சொல்லுவாயாக. எம்மையாளுடையவனுடைய ஆறானது அந்த ஐயனிருக்கும் பெருமைவாய்ந்த என் உள்ளத்திலுள்ள மலத்தைக்கழுவுதற்காகவந்து ஓடிப்பாய்கின்ற பேரானந்தமாகிய ஆறும்.

# அன்னைப்பத்து

## ஆத்துமபூரணம்.

ஆத்துமபூரணத்திலே உலகஅறிவு கெடுவைதப் பாடியருளுகின்றார்.

கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும். (கo)

இ—ள்: கொன்றைமலர் சந்திரன் ஊமத்தமலர் வில்வ மாகிய இவைகள் சிவபிரானுடைய திருமுடியிலுண்டு; அந்தத் திருமுடியிலுள்ளவற்றுள் ஊமத்தமலரானது எனக்கு மயக்கத்தை உண்டாக்கிவிட்டது, தாயே என்பாள்.

---

# ௯. திருப்பள்ளியெழுச்சிமுதலியவை

திருப்பள்ளியெழுச்சி, அருட்பத்து ஆகிய இவற்றில் திரோதானசுத்தியும் மகாமாயாசுத்தியும், கோயின்மூத்த திருப்பதிகத்திலே அநாதியாகிய சற்காரியமும் சொல்லப்படுகின்றன. திரோதானசுத்தியாவது ஆணவம் பரிபாகப்படுதலாலே ஆன்மா அதனுடைய தடையினின்று நீங்குதல். மலம் இரவுக்கும் மலமறைப்பு இருட்டுக்கும் மலநீக்கம் விடிதலுக்கும் * ஒப்பிடப்பட்டன.

## திருப்பள்ளியெழுச்சி

### திரோதானசுத்தி.

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் றிருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (௧)

இ—ள்: என்னுடைய வாழ்வுக்கு மூலகாரணமான பொருளே, பொழுதுவிடிந்தது; உன்னுடைய (ஞானப்)

*விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து. —திருவருட்பயன்.

பொலிவான திருவடிகளிலே பூக்களையிட்டு உன்னுடைய திருமுகத்திலே எமக்காக அருள்காலுகின்ற அழகிய திருநகையைப்பெற்று அத்திருவடிகளைத் தொழுவோம். சேற்றிலே உண்டாகின்ற தாமரைகள் பூக்கின்ற குளிர்ந்த வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே, இடபக்கொடியை உடையவனே, என்னை ஆட்கொண்டவனே, திருப்பள்ளியினின்றும் எழுந்தருளுக.

நீ திருப்பள்ளியினின்றும் எழுந்தால் உன்னுடைய திருமுகத்தினின்றும் எழுகின்ற அருள்நகையைப்பெற்று அதனாலே திரோதானசுத்தியடைந்து, உன்னுடைய திருவடிகளாகிய ஞானத்தைத் தொழுதுநிற்போம் என்பது பொருள்போலும். முப்புரங்களெனப்படும் மும்மலத்தைச் சாம்பலாக்கியது திருநகையாதலால், எங்கள் மலமறைப்பை நீக்குதற்குத் திருநகையைப் பெறுவோமெனப்பட்டது.

அருணன் இந் திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. (௨)

இ—ள்: திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமானே, அருட்செல்வத்தைத் தருவதற்காகவருகின்ற இன்பமலையே, இன்பமாகிய அலைமோதுகின்றகடலே, சூரியன் உதிக்கப்போகின்றான். இருள் நீங்கிவிட்டது. உதயகாலத்து மலர்போன்ற உன்னுடைய திருமுகமாகிய ஆகாயத்திலே அருளாகிய சூரியன் எழுந்து வரவர எங்கள் கண்களாகிய வாசனைபொருந்திய மலர்கள் அலர அங்கே அவைகளைச் சுற்றி வண்டுக்கூட்டங்கள் சத்திக்கும். இவைகளையறிந்துகொள்ளுக.

இத்திருப்பாடலிலே மலமறைப்பை நீக்குந்திருவருள் சூரியனுக்கு ஒப்பிடப்பட்டது.

பதிகத்தின் இறுதிப்பாட்டிலே, பிரம விட்டுணுக்களுக்குக் கிடையாதபாக்கியம் பூலோகத்தாராகிய எங்களுக்குக் கிடைத்ததென்று பாடியருளுகின்றார். கடவுளுடைய பேரருளை நாம் பெறவேண்டும். அதைப்பெறுதற்கு அவர் வலியவந்து ஆட்கொள்ளவேண்டுமென்று பாடுகின்றார்.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
  போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
  திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
  படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
  ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (௧௦)

இ—ள்: திருப்பெருந்துறையிலெழுந்தருளி யிருப்பவனே, விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் "நாம்பூலோகத்திலே பிறவாமையினாலே காலத்தை வீணாகப்போக்குகின்றோம். இந்தப்பூலோகமே சிவபெருமான் ஆன்மாக்களை உய்விக்குமிடம்" என்று கண்டு இங்கேபிறத்தற்கு விஷ்ணுமூர்த்திவிரும்பவும் பிரமதேவர் ஆசைப்படவும் நாங்கள் இந்தப்பூலோகத்திலே பிறந்திருக்கிறபடியால், எங்களை உன்னுடைய நிறைந்த நித்தியமான திருவருளோடு இங்கே வந்து ஆட்கொள்ள வல்லனாயிருக்கிறாய்; பிறவிப்பிணியைத் தீர்க்கும் அமிர்தமே திருப்பள்ளியெழுந்தருளுக.

---

# அருட்பத்து

## மகாமாயாசுத்தி.

ஆணவமாகிய இருளினாலே ஆன்மாக்கள் ஒன்றையும் அறியமாட்டாமலிருக்கும். அவைகள் பேரறிவைப்பெறுந் தகுதி வரும்

வரையும் அவைகளுக்குச் சிற்றறிவைக்கொடுப்பது மாமாயையி லிருந்துதோன்றுந் தத்துவங்களாம். மலமறைப்பு நீங்கப் பேர றிவு உண்டாகும். அப்போது சிற்றறிவுதேவையில்லை. ஆதலால் ஆன்மா மாமாயையினின்றும் நீங்கும். இது மகாமாயாசுத்தியா கும். மகாமாயாசுத்தியாதற்குச் சிவபிரானுடையபேரருள்வேண்டு மாதலால் இப்பதிகத்திலே மணிவாசகப்பெருமான் சிவபெரு மானை விளித்துச் சொல்லுவதாவது "உன்னை அன்போடழைத் தால் 'அதுஎன்ன' என்றுகேட்டுச் சிவலோகத்துக்குப் போகிறவழி யைக்காட்டி" என்னை அங்கேவருமாறு அழைத்தருளுக.

*மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி*
*மறுமையோ டிம்மையுங் கெடுத்த*
*பொருளனே புனிதா பொங்குவா ளரவங்*
*கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்*
*தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்*
*செழுமலர்க் குருந்தமே வியசீர்*
*அருளனேன் அடியேன் ஆதரித் தழைத்தால்*
*அதெந்துவே என்றரு ளாயே.* (கூ)

*திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்*
*செழுமலர்க் குருந்தமே வியசீர்*
*இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்*
*டென்னுடை எம்பிரான் என்றென்*
*றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்*
*அலைகட லதனுளே நின்று*
*பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்*
*போதராய் என்றரு ளாயே.* (௧0)

**இ—ள்:** *ஆணவ மயக்கம்பொருந்திய என்னுடைய மனத்திலேயுள்ள கலக்கத்தைத் தீர்த்தற்காகத் திருவருட் பார்வைசெய்து, மறுபிறப்பை யில்லாமற்பண்ணி, இப்பிறப் பிலே வினை ஏறாமல் தடுத்தமெய்ப்பொருளே, நின்மலனே, மிக்க ஒளிபொருந்திய பாம்பும் கங்காநதியும் தங்குகின்ற சிவந்த சடையையுடையவனே, மெய்யறிவைத் தருகின்ற*

நான்கு வேதங்களும் ஓதப்படுகின்ற திருப்பெருந்துறையிலே செழுமையான மலர்கள் பொருந்திய குருந்தமரநீழலில் எழுந்தருளிய பேரருளுடையவனே, அடியேன் அன்போடு அழைத்தால் "அது என்ன"* என்று கேட்டு விசாரித்தருளுக.

அரியதவவடிவினனே, அழகியநீண்டசோலைகள்சூழ்ந்த திருப்பெருந்துறையிலே மலர்கள் நிறைந்த குருந்தமரநீழலிலே நீ காட்டியருளிய திருவுருவத்தைப் பிரிந்தமையால் வருத்தமுற்று என்னுடைய தலைவரல்லவா என்றுநினைந்து அன்புடன் அழைத்தால், "பிறவிக்கடலில்நின்று நீங்கி என்னைச்சேருதற்குவா, கயிலைக்குப் போகும் வழியிது தான் இங்கேவா" என்று சொல்லியருளுவாயாக.

---

# கோயின் மூத்த திருப்பதிகம்

## அநாதியாகிய சற்காரியம்.

சற்காரியமென்றது ஐந்தொழில்களுட் சிறந்ததாகிய அருளல் போலும். (சத் = சிறந்த, காரியம் = தொழில்).

இப்பதிகத்தின் முதலிலே சத்தியுஞ் சிவமும் நெருப்பும் சூடும்போல அபின்னமாயிருக்கும் தன்மையையும், சிவமும் ஆன்மாவும் அருக்கனொளியுங் கண்ணொளியும்போல அத்துவிதமாயிருக்குந்தன்மையையும் உணருதல் உண்மைநெறிக்குச் சாதனமாதல் காட்டப்படுகின்றது.

உடையாள் உன் தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன், அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய் பொன்னம்பலத்தெம், முடியா முதலே என்கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே (க)

---

* "எந்து" என்பது இக்காலத்தில் மலையாளத்தில் உபயோகிக்கப்படுஞ் சொல்.

இ—ள்: பொன்னம்பலத்திலே திருநடனஞ்செய்யும் ஈறில்லாத முதற்பொருளே, உமையம்மையார் உன்னிலிருக்கிருர்; நீ உமையம்மையாரிலிருக்கிருய்; நீங்களிருவிரும் என்னிலிருப்பது உள்ளதானல், என்னுடையகருத்து நிறைவேறுதற்கு நீ எனக்கு முன்னே நின்று உன்னுடைய அடியாருள் ஒருவனுய் நானிருக்கும் நிலைமையைத் தந்தருள்.

மணிவாசகப்பெருமான் கூறியருளும் நியாயம் எப்படியெனில்: நீயும் அருட்சத்தியும் ஒன்ருகஇருக்கிறீர்கள் (அபின்னசம்பந்தம்;) நீயும்நானும் ஒன்ருகஇருக்கிறேம் (அத்துவிதசம்பந்தம்) ஆதலால் நீயும் அருட்சத்தியும் என்னில் இருக்கிறீர்கள். அப்படியானல் நான் அந்தத்திருவருளைப்பெற்று நான் என்பதைமறந்து நீயாகி உன்னடியவனுகலாம். அடிஎன்பது சிவஞானம்.

அடுத்தபாடலிலே மணிவாசகப்பெருமான் தம்முடைய நிலையின் மெலிவைக் கூறித் தம்மைத் தேற்றுமாறு வேண்டுகின்றூர்.

முன்னின் ருண்டாய் எனைமுன்ன மியானு மதுவே
முயல்வுற் றுப், பின்னின் றேவல் செய்கின்றேன் பிறபட்
டொழிந்தேன் பெம்மானே, என்னின் றருள் இவர
நின் று போந்தி டென்று விடில்அடியார், உன்னின் றிவனுர்
என்ருரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. (உ)

இ—ள்: முதற்பொருளே, முன்னே நீயெனக்கு எதிரில் வந்து என்னையாட்கொண்டாய்; நானும் அந்தப்படியே தொழிற்பட்டு உனக்குப்பின்னேநின்றுஉன்னுடைய வழிப்படி ஏவல்செய்கின்றேன். இப்போது நான் பிறபட்டுப்போனேன். என்னை இப்போது அருள்பெறுமாறு வாவென்று

நீ யழையாவிட்டால், அடியார்கள் உனக்குமுன்னின்று இவன் அடியவனல்லன் என்று சொல்லமாட்டார்களா, பொன்னம்பலக்கூத்தை விரும்புகின்றவனே?

வேறொருபாடலிலே தம்மை விடுகாலிமாடுபோலவிடாமல், தம்மைக்கட்டுப்பாடுபண்ணி ஆளும்படி வேண்டுகின்றார்.

இரங்கு நமக்கம்பலக்கூத்தனென்றென்றேமாந்திருப்பேனை
அருங்கற் பனை கற்பித்தாண்டாயாள்வா ரிலிமாடாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென்றருளாயே.

இ—ள்: சிவபிரான் எனக்கு இரங்குவாரென்று சொல்லிச் சொல்லிப் பெருமகிழ்ச்சியோடிருக்கின்ற என்னை அரிய கட்டுப்பாடுகள் செய்து நீ ஆண்டருளினாய்; எப்போதும் இவ்விதமாகவே என்னையாண்டுவருவதற்காக உன்னுடைய அடியார்களும் நீயும் நின்று ஆனந்திக்கின்ற இடத்துக்கு நான் வருதற்காக என்னை வாவென்று அழைத்தருள், என்னுடைய வாழ்முதலே; நான் ஆளுபவரில்லாத மாடாகலாமோ?

இந்தத்திருவாசகம் போலிச்சுவாதீனத்தைப் பரமபதமாகக் கொள்ளும் இக்காலத்தவர்களுடைய மயக்கத்தை நிர்மூலமாக்கத் தக்க ஒருமருந்து. மும்மலங்களாகிய மூவகை விலங்குகளிலகப்பட்டிருக்கும் எங்களுக்குச் சுவாதீனம் வருவது இவைகள் நீங்கிய அன்றைக்கேயாம். இந்த விலங்குகளினின்றும் நீங்குதற்குப் பிறவிலங்குகள்வேண்டும். மலங்களின் செயலினாலே எங்களுக்கு அகந்தையும், தீய ஆசைகளும், கோபம் முதலிய மனச்சலனங்களும் உண்டாகின்றன. இவைகளினின்றும் எங்களைக் காத்தற்குப் பிற விலங்குகள் வேண்டும். இவைகள் சமயக்கட்டுப்பாடு, சாதிக்கட்டுப்பாடு, தேசக்கட்டுப்பாடு, தொழிற்கட்டுப்பாடு எனப்பலவகைப்படும். சாதிக்கட்டுப்பாட்டினால் தாய், தந்தை, தமையன் முதலிய இனத்தவர்களுக்கும், தேசக்கட்டுப்பாட்டினால் ஊரிலுள்ள முதி

யோர் பெரியோருக்கும், தொழிற்கட்டுப்பாட்டினுல் உயர்ந்த தொழிலிலுள்ளவர்களுக்கும், அமைந்து நடக்கவேண்டிவரும். இவர்களுக்கமைவதினுலும், இவர்களுடைய நல்லபிப்பிராயத்தையும் ஆசீர்வாதத்தையும் வேண்டி நடப்பதினுலும் அளவற்ற தீமைகளிலிருந்து தப்பிக்கொள்ளலாம். நல்லொழுக்கத்திலே நாட்டமுள்ளவர்கள் தாங்கள் பணியவேண்டியவர்களுடைய தொகையை அதிகப்படுத்தி வருவார்கள். அவர்களுக்குப் பணியாமலிருப்பதே சுவாதீனமென்று நினைப்பவர்கள் எல்லையில்லாத தீமைகளுக்கு ஆளாவார்கள்.

மும்மலங்களினின்றும் நீங்கிய மாணிக்கவாசகப்பெருமான் தமக்குச் சுவாதீனம்வேண்டாமென்றும், சுவாதீனமான மாடு பயிரைத்தின்று பிறருக்குத் தீமைசெய்து, அதன்பயனுகத் தனக்குத் துன்பத்தைத் தேடுவதுபோலத் தாம் தீமைக்கு ஆளாகலாகாதென்றும் விரும்புவாராஞல் எம்போலியர் தீவினைக்கஞ்சித் தீவினைசெய்யாமல் தடுக்கத்தக்க பல பெரியோரைத் தலைவராகக்கொண்டு அவர்களுக்கடங்கி நடப்பது எவ்வளவு அவசியமென்பது தெள்ளிதிற் புலப்படும்.

---

# ௪.கோயிற்றிருப்பதிகம்முதலியவை.

கோயிற்றிருப்பதிகம், ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, ஆகியநான்கும் முறையே அனுபோகம், ஆன்மா, முத்தி, அத்துவிதம் ஆகிய இவற்றின் இலக்கணங்களைக் கூறுவன.

இவற்றுள், அனுபோகவிலக்கணத்துள்ளே சிவபிரான் ஆன்மாக்களுடைய ஐம்புலனையுமடக்கிச் சிவாநந்தத்தைக்கொடுக்கும் போது அதை அனுபவிக்கும்முறைமை சொல்லப்படுகின்றது.

## கோயிற்றிருப்பதிகம்.

### அனுபோகவிலக்கணம்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்

தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை அன்பே. (க)

இ—ள்: எனக்குச்சகாயமாய் நிற்கவேண்டிய ஐம்பொறிகள் என்னைப்பகைத்துநின்று மயக்கி எனக்குத்துரோகஞ் செய்வதைக்கண்டு நீ அவைகளையடைத்துவைத்தாய், ஆன்ம ரட்சகனே. பின்பு எனக்குள்ளே ஞானச்சுடராக நின்று என்னுடைய அறிவை விளக்குகின்றாய்; உன்னுடைய சொரூபத்தை நான் காணத் திருவருள்செய், திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானே, தெளிந்த தேன்போல இனியவனே, எல்லையில்லாத உலகங்களெல்லாவற்றையுங் கடந்துநின்ற பேரின்பமாயும் பேரன்பாகியும் இருப்பவனே.

கண் காது முதலிய பொறிகள் எங்களுக்குக்கிடைத்தது நாங்கள் எங்களுடைய நல்வாழ்க்கைக்கு உபயோகிக்கும் பொருட்டேயாம். ஆயினும் நாங்கள் அவைகளை யெங்களுடைய தீயவழிகளிலே உபயோகிக்கின்றோம். எங்களுக்குத் தீமையானவற்றை வெறுக்கவேண்டிய நாவானது கள் புலால் முதலியவற்றை நாடுகின்றது; காது தீயசொற்களையும் தீயபாக்களையும் கேட்க ஏவுகின்றது. இப்படியாக எங்களுக்குத் துணையாகவேண்டிய பொறிகள் எங்களுக்கு மாறுகிக்கொண்டன. இவைகள் என்றும் எங்களுக்குத் துணையாக அமைய வேண்டுமாயின், எங்களுடைய தொழில்கள் முடிந்தவுடனே, அவைகளைக் கடவுள் வழிபாட்டில் விடவேண்டும். அப்பர் சுவாமிகளுடைய திருவங்கமாலையில் இது சொல்லப்பட்டிருக்கிறது. மாணிக்கவாசக சுவாமிகளும் வருந்திருப்பாடலிலே சொல்லியருளினர்.

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர

*வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை*
*மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்*
*தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்*
*தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.*
*(திருச்சதகம்—உக)*

*இ—ள்: நாயினேனுடையமனம் உன்னைச் சிந்திக்கவும், இருகண்களும் உன்னுடைய திருவடிமலர்களையே காணவும், வணக்கமும் உன்னுடைய திருவடிகளுக்காகவும், பேசுவதெல்லாம் உன்சிறந்தபுகழாகவுஞ் செய்து, ஐம்பொறிகளால் நுகரப்படும்பொருள் நீயேயாக வந்து என்னை அடிமைக் கொண்டு என் உள்ளத்திலே புகுந்த ஒப்பற்ற பெரிய அமுதக்கடலே, என்றும் ஒருதன்மையாயுள்ளவனே, செந்தாமரைக்காடுபோன்ற நிகரில்லாத ஒளிவடிவினனே, அறிவு தொழிலாகிய இரண்டுமற்ற தனிப்பொருளாகிய எனக்கு உன்னை நீ கொடுத்தருளினை.*

இப்படியாகக் கடவுளையேநினைத்து அவருடைய திருநாமத்தையேசொல்லி அவரையே எல்லாப்பொருட்களிலும் கண்டால், அந்தப்பொருள்கள் மறைந்து மாயையின் மயக்கம்நீங்கிச் சிவம்ஒன்றே எங்குந்தோன்றி மெய்யறிவு உண்டாகும். இந்தக் கருத்து பின்வரும் திருப்பாடலில் விளங்குகின்றது.

*இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்*
*தெழுகின்ற ஞாயிறே போன்று*
*நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்*
*நீயலாற் பிறிதுமற் றின்மை*
*சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்*
*திருப்பெருந் துறையுறை சிவனே*
*ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை*
*யாருன்னை யறியகிற் பாரே.*
*(கோயிற்றிருப்பதிகம்—எ)*

*இ—ள்: நீ இப்போது எனக்குத் திருவருளைச்சுரந்து, சூரியன் புறஇருளையோட்டுவதுபோல, நீ என்னுடைய உள்ளிருளையோட்டுகின்ற தன்மையை இயல்பாக அறிந்தேன்.*

நீயல்லாமல்வேறுபொருள்கள்உலகத்திலில்லாமையை அநுபவத்தாற் கண்டேன். அவைகளின் தோற்றம் வரவரக் குறைய, நீயே அவைகளின்மேலே தான்றுகின்றாய். திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, அந்த மாயேயப்பொருளொன்றும் நீயல்ல, ஆயினும் உன்னையன்றி அவைகளொன்றுந் தோன்றமாட்டா. உன்னுடைய உண்மையான தன்மையை அறியத்தக்கவர் யார்?

இந்தப்பதிகத்தினிறுதியிலே, எல்லையில்லாததாகிய இந்த அநுபோகவின்பத்தைக் கடவுளருளியதைக் குறித்துப் பேரானந்தத்தோடு பாடியருளுகின்றார்.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம் மாறே. (௧0)

இ—ள்: நித்திய சுகத்தைச் செய்பவனே, நீ என்னை வாங்கிக்கொண்டு உன்னைத்தந்தாய்; நீயோ நானோ சமர்த்தன்? நான் உன்னிடமிருந்து எல்லையில்லா வின்பத்தைப் பெற்றேன்; நீ என்னிடமிருந்து யாது பெற்றாய்? என் தலைவனே, திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்குஞ் சிவபிரானே, என்பரமபிதாவே, என்னுடைய உடலையிடமாகவும், எனது மனதைக் கோயிலாகவுங் கொண்டு வாழ்பவனே, உன்னுடைய இந்த அருட்செயலுக்கு நான் பிரதியுபகாரமாக மாட்டேன்.

சிவபிரானிலும்பார்க்கத் தாம் சமர்த்தர் என்றது புகழ்ச்சி போல் இகழ்ச்சி. எல்லையில்லாத இன்பத்தினாலே இப்படிப்பாடுதல்

*இயல்பு. ஆயினும் இறுதிவரியில் உண்மையான தன்மையைச் சொல்லி மணிவாசகப்பெருமான் சிவபிரானைத் துதிக்கின்றார்.*

# ஆசைப்பத்து

## ஆத்துமஇலக்கணம்.

**ஆத்துமஇலக்கணமாகிய ஆசைப்பத்திலே, உடம்பானது ஆத்துமாவுக்குப்புறம்பானதாய் இலகுவில் அழியத்தக்க பொருள் என்பதும் ஆத்துமா சிவபெருமானுடையதிருவருளையே துணையா யுடையதென்பதும், அவனைக்கண்டு அவருடைய முறுவல்நகை யின் இன்பத்தை நுகர்ந்துகொண்டிருப்பதே ஆத்துமாவுடைய இறுதிநிலை யென்பதும் கூறப்படுகின்றன. இப்பதிகத்து மூன்றந் திருப்பாடல் பின்வருமாறு:-**

*சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லிது சிதையக், கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே, தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி, ஆவா வென்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.* (௩)

*இ—ள்: புண்கள் உண்டாகி யவற்றிலிருந்து சீவடிந்து ஈகள்மொய்ப்பதும் அழுக்கையுடையதுமான இந்த உடம்பாகிய சிறியகுடில் அழியும்போது, என்னை யுன்னிடம் அழைத்துக்கொள், எனது இறைவனே. ஐந்தொழில் நடனஞ் செய்பவனே, என்னைக்காத்து அடிமைக்கொள்ளும் பரமாசாரியனே, ஞானவடிவினனே, தேவர்களுக்கு அரியவனே, மெய்ப்பொருளே, நீ என்னுடைய முகத்தைச் சற்றே பார்த்தருளி இரங்கி "நீவா" என்று எனக்குக் கட்டளையிட்டருளுதலை ஆசைப்படுகின்றேன்.*

*சிவபிரானது பேரருளைக் குறிக்கும் புன்னகையைத் தியானிப்பதால் எங்களுக்கு அவரிலே அன்புண்டாகும். எமது தாய்*

தந்தையர் மனைவி மக்கள் நண்பர் முதலியோருடைய நகையால் உண்டாகும் அன்பும் இன்பமும் இதற்குச் சாட்சியாகும்.

எங்கேயிருந்தாலும் அவருடைய ஆயிரம் திருநாமங்களையுஞ் சொல்லித் துதிக்க ஆசைப்படுதல் பின்வருந் திருப்பாடலிற் சொல்லப்படுகின்றது.

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமா னெனவேத்த
ஆரா வமுதே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே. (எ)

இ—ள்: மனிதருந் தேவருந் துதித்து வணங்குந் தலைவனே, ஞானச்சுடரே, என்னிடம் வருவாயாக. பிறவியை நீக்கி முத்தியைத் தந்து வந்து ஆட்கொள்பவனே, உன்னுடைய ஆயிரந் திருநாமங்களையும் சொல்லித் துதித்து எம்பெருமானேயென்று ஏத்தித்திரிய ஆசைப்பட்டேன், தெவிட்டாத அரிய அமுதமே.

# அதிசயப்பத்து

## முத்தியிலக்கணம்.

இதிலே முத்திஸ்தானமாகிய சிவபிரானது திருவடிகளின் பெருமையையும், உலகப்பொருள்களின் சிறுமையையும், சற்றேனும் தகுதியில்லாத தம்மைச் சிவபிரான் திருவடியிற் சேர்த்த அற்புதத்தையுந் துதித்துப் பாடியருளுகின்றார்.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, ஆக்கி ஆண்டு தன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. (அ)

இ—ள்: நான் பக்குவமற்று இருந்தகாலத்திலே ஞான சோதியாகிய சிவபெருமான் என்னைத் தூரத்திலேவிட்டுத் தன்னோடு சேருகிற பாக்கியத்தைத்தராமல், இந்தக்கூடாகிய உடம்புக்குட் செலுத்தி, பல பிறவிகளெடுத்தபின்பு பக்குவம் வந்தகாலத்திலே திருவருட்கண்ணால் என்னைப் பார்த்து, பொருள்நிறைந்த ஒரு சிறுசொல்லை யுபதேசித்துப் பாசமாகிய நரகத்தின் நின்றும் நீக்கி, என்னைப்பிடித்துத் தூக்கி, முன்செய்த வீண்வினைகள் அற்றுப்போக மலத்தை முற்றாகக் கடிந்து, அடியவனாக்கி ஆண்டு தன்னுடைய அடியவர்களோடு கூட்டியவதிசயத்தைக் கண்டோம்.

---

# புணர்ச்சிப்பத்து

## அத்துவித இலக்கணம்.

இதிலே சிவபிரானோடு ஒன்றாகிச் சிவானந்தத்தை யனுபவித்தல் எப்போதுகிடைக்குமென்று பாடுகின்றார்.

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை வாளா தொழும்புகந்து, கடைபட்டேனை ஆண்டுகொண்ட கருணையைனைக்கருமால் பிரமன், தடைபட்டின்னுஞ் சார மாட்டாத் தன்னைத் தந்த என்னாரமுதைப், புடைபட்டிருப்பதென்று கொல்லோஎன் பொல்லா மணியைப் புணர்ந்தே.
(க)

இ—ள்: ஒளிபொருந்திய பொன்மலைபோல் எல்லையில்லாத செல்வமாயும், தொளைக்கப்படாத முத்துப்போல் எங்கும் ஒளியாயும், கடையேனுடைய பயனில்லாத தொண்டை நயந்து என்னையாட்கொண்டருளிய கருணைநிதியாயும், பிரமவிட்டுணுக்களும் மலத் தடக்கினால் அடைதற்கரியவராயும், தம்மை யெனக்குத்தந்த பேரானந்தமாயும், எனது பெருஞ் செல்வமாயுமுள்ள சிவபிரானை யடைந்து இருப்பது எக்காலமோ?

---

# ரு. அடைக்கலப்பத்து முதலியன.

அடைக்கலப்பத்து, திருக்கழுக்குன்றப்பதிகம், திருவார்த்தை, திருப்படையெழுச்சி, திருப்படையாட்சி, கண்டபத்து, குழைத்தபத்து, திருவேசறவு ஆகிய எட்டுப்பதிகங்களும், ஆன்மா பக்குவமடையும் முறையாகிய பக்குவநிர்ணயத்தையும், அந்தப்பக்குவம் வருங்காலத்திலே பெறும் குருதரிசனத்தையும், குருவினுடைய உபதேசத்தினாலே பெறும் அறிவினால் இன்புறுதலையும், அந்த அறிவினாலே தோன்றும் பிரபஞ்சவெறுப்பாகிய பிரபஞ்சப்போரையும், அதனால் வரும் சீவஉபாதியொழிதலையும், அதன் பின் பெறும் சிவபிரானது நிருத்த தரிசனத்தையும், தரிசிக்கும் போது தன்னைச் சிவபிரானுக்கு நிவேதிக்கும் ஆத்மநிவேதனத்தையும், சுட்டறிவொழித்தலையும் முறையே கூறுகின்றன. சுட்டறிவாவது பொறி புந்திகளாற் பொருட்களைக் கூறுகூறாகக் காணுதல். இதனால் அறியப்படுவன மாயைப் பொருள்கள். சுட்டறிவொழியும்போது மெய்ப்பொருளாகிய பரம்பொருளே தோன்றும்.

## அடைக்கலப்பத்து

### பக்குவ நிர்ணயம்.

தாய் தந்தை முதலியோரும் உலகப்பொருள்களும் ஆன்மாவுக்குத் துணையானவைகளல்லவென்றும் சிவபிரான் ஒருவரே துணையென்றும் அறியுங்காலம் ஆன்மா பக்குவமடைந்தகாலமாகும். அப்போது ஆன்மாவானது தான் முன்பெற்ற உலக அறிவு அறிவன்றென்பதும் சிவபிரானுடைய திருவடிகளை அடைதற்கு வேண்டிய அறிவே அறிவென்பதும் அந்த அறிவு சிறிதும் இல்லாமையும் தோன்றும்.

*பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்*
*மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர்*
*நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியும்*
*அறிவறி யேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே.* (கூ)

*இ—ள்:* உன்னுடைய திருவருளினின்றும் நீங்குதலை யறியாத மெய்யன்பர்கள் உன்னுடைய அருளைப்பொழி கின்ற திருவடிகளுக்குக்கீழே வாழ்ந்து சிவானந்தமாகிய நிலையான செல்வத்தைப் பெற்றார்கள். நானோ உன்னைவணங் கும் வழியையறியேன், உன்னையறியேன், உன்னையறியும் வழியையுமறியேன், என்னையுடையவனே, அடியேன் உனக் கடைக்கலம்.

---

# திருக்கழுக்குன்றப்பதிகம்

## குருதரிசனம்.

திருக்கழுக்குன்றத்திலே மாணிக்கவாசகப்பெருமானுக்குச் சிவ வினையொப்பு வந்தபோது சிவபிரான் குருமணியாகத் தோன் றிய முறைமை பின்வருஞ் செய்யுளிற் கூறப்படுகின்றது.

*பிணக்கி லாதபெ ருந்துறைப்பெரு மான்உன் நாமங்கள்*
*பேசுவார்க், கிணக்கி லாததோர் இன்பமேவருந் துன்ப*
*மேதுடைத் தெம்பிரான், உணக்கி லாததோர் வித்து*
*மேல்விளை யாமல் என்வினை ஒத்தபின், கணக்கி லாத்*
*திருக் கோலம் நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.* (க)

*இ—ள்:* அன்பு நிறைந்த திருப்பெருந்துறைப்பெரு மானே, உன்னுடையபெயரைச் சொல்லுகிறவர்களுக்கு நிக ரில்லாத இன்பமேவந்துசேரும். நீஎன்னுடைய துன்பங்களை நீக்கிஎனக்குச்சிவவினையொப்புவந்தபொழுது என்னுடைய

ஆகாமியம் ஏறுமல் உன்னுடைய அகண்ட திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்திலே நீயாகவந்து காட்டியருளினாய்.

இணக்குதல் = சேருதல்; இணக்கிலாத = சேருதலில்லாத = ஒப்பற்ற. உணக்குதல் = வறுத்தல்; உணக்கிலாததோர்வித்து = முளைக்கத்தக்கவித்து; இங்கே ஆகாமியம்.

---

# திருவார்த்தை
## அறிவித்து இன்புறுதல்.

---

இதிலே சிவபிரானுடைய திருவருளை அறிந்தவர்கள் எம்பிரானாகி இன்புறுவார்களென்பது காட்டப்படுகின்றது.

*மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேய சோதி, கோதில் பரங்கருணை யடியார் குலாவு நீதிகுணமாக நல்கும், போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடைவந்திழிந், தாதிப் பிரமம் வெளிப்படுத்த அருளறி வாரெம்பி ரானு வாரே.*

இ—ள்: உமாதேவிபாகராயும் மந்திரங்களை உபதேசிக்கும் பரமாசாரியராயும் அன்பருடைய இருதயமாகிய தாமரைமலரில் வீற்றிருக்கும் ஞானசோதியாயும் நிர்மலமான கருணைக்கடலாயும் அடியார்கள் பாராட்டுகின்ற சுகத்தைச்செய்து அவர்கள் நற்குணமுடையராதற்கு அருளைக் கொடுப்பவராயுமுள்ள திருப்பெருந்துறையிலெழுந்தருளிய எமது புண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான் பூலோகத்திலே வந்து மனிதவடிவத்தைக்கொண்டு உண்மைப்பொருளை வெளிப்படுத்திய திருவருளை யறிபவர்கள் எமது கர்த்தா ஆவர்.

---

# திருப்படையெழுச்சி

## பிரபஞ்சப்போர்.

இதிலே பிரபஞ்சப்போருக்குவேண்டிய கருவிகளுஞ் சேனைகளுஞ் சொல்லப்படுகின்றன.

ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. (க)

இ—ள்: எமது தலைவர் ஞானமான வாளைக் கையிலே தாங்கியிருக்கின்றார். நீங்கள் பிரணவநாதமாகிய போர்ப் பறையை அடியுங்கள். பெருமை பொருந்திய இடபத்தை வாகனமாயுடைய எம் தலைவர்க்கு அறிவாகிய வெள்ளிய குடையைப்பிடியுங்கள். உங்கள் உடம்புகளைத் திருநீறாகிய காவற்சட்டையால் முற்றாகப் போர்த்துக்கொள்ளுங்கள். மாயப்படை எங்களை வந்து தாக்குமுன் ஞானாகாசமாகிய எங்கள் ஊரை நாங்கள் பிடித்துக்கொள்ளுவோம்.

# திருப்படையாட்சி

## சீவ உபாதி ஒழிதல்.

திருப்படையாட்சியாவது மலங்களை வெல்லுதற்கு வேண்டிய திருப்படைகளை ஆளுதல். அந்தப் படைகளின் துணைகொண்டு ஆன்மாவானது சீவஉபாதிகள் ஒழிந்துநிற்கும். ஒழிந்து நிற்கும்போது சமயசாதனங்கள் தேவையில்லை என்பது இந்தப் பதிகத்திலே கூறப்படுகின்றது.

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென்வாழ்வு கடைப்படும் ஆகாதே

*மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே*
*மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே*
*பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே*
*பாண்டிநன் ஞடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே*
*விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே*
*மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.* (க)

*இ—ள்: மீன்பிடித்தற்காக வலைவீசிய வேடனுகிய சிவபெருமான்வந்து எமக்குவெளிப்பட்டால், எங்களுடைய கண்கள் இரண்டும் அவனுடைய திருவடிகளைக்கண்டு களித்தல் நிகழாது; பெண்களுடைய வாழ்க்கைகளிலும்பார்க்க எங்களுடைய வாழ்க்கை கீழ்ப்படாது; உலகங்களிலே போய்ப் பிறத்தற்குக் காரணமாகிய கடவுளை மறத்தல் நிகழாது; திருமால் அறியமாட்டாத திருவடிகள் இரண்டையும் வணங்க வராது; மகிழ்ச்சியைத் தருவதாகிய இசை பொருந்திய பாடல்களையும் ஆடல்களையும் பயில வராது; பாண்டி நன்ஞட்டிலெழுந்தருளிய சிவபிரானதுபடைகளின் வெற்றியைப் பாடுதல் நிகழாது; தேவர்களுடைய களிப்புக்குக் காரணமான அவருடைய பெருமை புலப்படாது.*

---

# கண்டபத்து

## *நிருத்ததரிசனம்.*

---

நிருத்ததரிசனத்தினலே ஆன்மாவானது மலம் நீங்கிச் சிவமாதுமென்பதை முதற்செய்யுள் கூறுகின்றது.

*இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமாய்*
*அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்*
*சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட*
*அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.*

இ—ள்: தீயபொருள்களை நல்லவைகள்போலக் காட்டும் இந்திரியங்களுக்கு வசப்பட்டு மயங்கி வினைசெய்து இறந்து துணையின்றி யலைந்து கொடியநரகில் விழவேண்டிய எனது மனத்தைத்தெளிவித்து, என்னைச்சிவமாக்கி,என்னை யாட்கொண்டருளிய முடிவில்லாப் பேரின்பமானபொருளை அழகிய சிதம்பரத்திலே கண்டேன்.

---

# குழைத்த பத்து

## ஆத்தும நிவேதனம்.

இது ஆன்மாவானது தன்னைக் கடவுளுக்கு நிவேதித்தமுறைமையைக் கூறுகின்றது. அப்படி நிவேதித்தமையால் ஆன்மா தனக்கென்றோர் எண்ணமில்லாமற் கடவுளுடைய திருவுள்ளக்கருத்தையே தன்னுடையகருத்தாகக்கோள்ளுதலும், தன்னுடைய உயிரும் உடலும் போருளும் கடவுளுக்கு நிவேதிக்கப்பட்டமையால் ஆன்மாவுக்கு ஒருகாலும் இடையூறு இல்லையேன்பதும் சோல்லப்படுகின்றன.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ, வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய், வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே. (௬)

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங், குன்றே யனையாய் என்னை ஆட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே. (௭)

இ—ள்: நான்விரும்பவேண்டியவைகள் எவைகள் என்பதை நீயே அறிவாய்; நான் அறியேன். நான்விரும்பவேண்டியவை யாவற்றையும் தருபவனும் நீயே. அறிய விரும்பிய பிரமவிட்டுணுக்களுக்கு அரியையாயினும், நீயாகவே வந்து என்னை யடியவனாக்கினாய். நீ விரும்பி எதைத்தருகின்றாயோ அதையே நானும் விரும்புவேன். நான் விரும்பவேண்டிய தொன்றுண்டாயினும் அதுவும் உன்னுடைய விருப்பமே.

அருட்பெருமையினால் மலையையொத்தவனே! என்னை ஆட்கொண்ட அக்காலத்தே என்னுடைய உடலையும், உயிரையும், பொருளையும் நீ ஏற்றுக்கொள்ளவில்லையா? நீ ஏற்றுக்கொண்டபடியால் எனக்கு இப்போது ஏதாயினும் இடையூறுண்டோ? எனக்கு நீ இன்பஞ்செய்தாலுந் துன்பஞ்செய்தாலும் உன்னுடைய சித்தந்தான். அவைகளைப் பற்றிப்பேச எனக்கதிகாரமில்லை, எட்டுத் திருப்புயங்களையும் மூன்று திருவிழிகளையும் உடையவனே.

# திருவேசறவு

## சுட்டறிவொழித்தல்.

சுட்டறிவாவது பொறி புந்திகளாற் பொருள்களைக்கூறுகூறாக அறியுந்தன்மை. இதனால் அறியப்படுவன உலகப்பொருள்கள். சுட்டறிவொழிதலாவது பிரபஞ்சமெல்லாவற்றையும் ஒன்றாக அறிதல். ஒன்றாக அறியும்போது உலகப்பொருள்கள் தோன்றாமல் மெய்ப்பொருளாகிய பரம்பொருளொன்றே தோன்றும். இது சிவபிரானுடையதிருவருளில் அமிழ்ந்துதலால் உண்டாவது.

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

(௧)

*இ—ள்: திருவிடைமருதி லெழுந்தருளிய எமது பிதாவே, வாசனைபொருந்திய இனிய மலர்போன்ற திருவடிகள் எனது மனதிலே பொலிந்து மனம் உருகவும், சிவபெருமானென்று சொல்லித் துதித்துத் தெருவெல்லாம் மிக ஓலமிட்டுத் திரியவும், உன்னுடைய பெருங்கருணையைப்பருகவும், அந்தக்கருணையாகிய பெருங்கடலிலே மூழ்கவும் எனக்கு அருள்செய்.*

---

# ௧௦. வாழாப்பத்து முதலியன.

பாழத்தீ இரண்டு அங்கங்களையுடையது. அவற்றுள் ஒன்று மலங்களில் நின்று நீங்குதல்; மற்றது சிவானந்தத்தைப் பெறுதல். இவற்றுள் முதற்பகுதி முத்தியுபாயம், சதாமுத்தி, முத்திக் கலப்புரைத்தல் என மூன்று பகுதிகளாய், வாழாப்பத்து பிரார்த்தனைப்பத்து பிடித்தபத்து ஆகிய பதிகங்களிலே சொல்லப்படுகின்றது. மற்றையது அணைந்தோர்தன்மை, சிவானுபவவிருப்பம், ஆனந்தமுறுதல், அனுபவத்துக்கையமின்மையுரைத்தல், சிவானந்தம் அளவறுக்க வொண்ணமை, அனுபவம் இடையீடுபடாமை, சிவானந்தம் மேலிடுதல், சிவானந்தமுதிர்வு, அனுபவமாற்றமை, சிவானந்தவிளைவு, சிவவிளைவு, ஒழியாவின்பத்துவகை, அனுபவாதீதமுரைத்தல், அனுபவவழியறியாமை எனப் பதினலு பகுதிகளாகித் திருவெண்பா, ஆனந்தமாலை, அச்சப்பத்து, பண்டாய நான்மறை, செத்திலாப்பத்து, குலாப்பத்து, உயிருண்ணிப் பத்து, திருப்புலம்பல், அற்புதப்பத்து, திருப்பாண்டிப்பதிகம் சென்னிப்பத்து, எண்ணப்பதிகம், யாத்திரைப்பத்து, அச்சோப் பத்து என்னும் பதிகங்களிற் கூறப்படுகின்றது.

# வாழாப்பத்து

## முத்தியுபாயம்.

முத்தியுபாயமாவது சிவபிரானுடைய திருவடிகளையே பற்றுகவும் அவரையே பொருளாகவுந் துணையாகவுங் கொண்டு வாழுதலாம்.

பாடிமால் புகழும் பாதமே அல்லால் பற்றுநான் மற்றிலேன் கண்டாய், தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே திருப்பெருந் துறையுறை சிவனே, ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை உணர்த்துவ துனக்கெனக் குறுதி, வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரி யாயே.

இ—ள்: மகாவிட்டுணுமூர்த்தி புகழ்ந்துபாடுகின்ற உன்னுடைய திருவடிகளேயல்லாமல் வேறொரு பற்றுமெனக்கில்லை, நீயாகவே என்னைத்தேடிவந்து ஆட்கொண்டாய்; சிவலோகத்திலெழுந்தருளிய இறைவனே, திருப்பெருந்துறையிலுள்ள மூர்த்தியே, நான் கோபிப்பதுவும் உன்னோடு தான்; மகிழ்வதும் உன்னோடுதான்; எனக்கு உறுதியை உணர்த்தும் உரிமை உனக்கேயுரியது; நான் தளர்ந்துபோனேன்; இனி இந்த உலகத்தில் வாழமாட்டேன்; என்னையுன்னிடம் வருமாறு அழைத்தருள்க.

"ஊடுவதுன்னோடு உவப்பதும் உன்னை" என்றதினுல் என்னுடைய சுற்றமும், நண்பரும், நான் சம்பந்தப்படும் மற்றையோரும் நீயே என்பது பெறப்பட்டது. சம்பந்தப்படுபவர்களோடுதான் வெறுப்பும் நேசமும் உள்ளன.

# பிரார்த்தனைப்பத்து

## சதாமுத்தி.

சதாமுத்தியென்பது எப்போதும் மலம் நீங்கிய நித்திய வாழ்க்கை.

மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா வுன்றன் கருணையினாற்
பாவி யேற்கு முண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே.

இ—ள்: நான் உன்னுடைய அடியார் கூட்டத்திலே யிருக்கிறதற்கு உண்மையாகவே விரும்புகின்றேன். குவளை மலரையுங் கயல்மீனையும் ஒத்த கண்ணையுடைய உமாதேவி பாகனே, உன்னுடைய திருவருளினாலே பேரின்பமாகிய பழைய கடலிலேசேர்ந்து, என்னுடைய வாழ்க்கையும், உடம்பும், யான் எனது என்ற அபிமானங்களும், இவை முதலிய யாவும் அற்றுப்போதல் எனக்குக் கிடைக்குமோ.

இவைகள் அற்றுப்போதல் முத்திநிலையிலாம்.

---

# பிடித்தபத்து

## முத்திக்கலப்புரைத்தல்.

முத்திக்கலப்புரைத்தலாவது சிவத்தோடு கலந்த தன்மையைச்சொல்லுதல்.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (க)

இ—ள்: குழந்தைக்குப் பசி வரும் நேரத்தை நினைத் தறிந்து அதற்குப் பாலூட்டுகின்ற தாயிலும் பார்க்க அதிக

மாயிரங்கிப் பாவங்களைச் செய்பவனாகிய என்னுடைய உடம்பைக் கசியச்செய்து, மெய்யறிவாகிய ஒளியைத் தந்து, குறைவில்லாத பேரின்பமாகிய தேனைப்பொழிந்து, என்னோடெங்கும் சேர்ந்து திரிந்த என்னுடை மெய்ப்பொருளே, சிவபெருமானே, நான் உன்னைத்தொடர்ந்து திரிந்து உறுதியாகப் பிடித்துக்கொண்டேன். என்னைவிட்டு எங்கே யெழுந்தருளுவாய்?

---

# திருவெண்பா

## அணைந்தோர் தன்மை.

---

அணைந்தோர் தன்மையென்பது முத்திபெற்றவாது நிலைமை.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. (௧௧)

இ—ள்: அழகிய திருப்பெருந்துறையில் எழுந்தருளிய இறைவன் இருளாகிய மலத்தைநீக்கிப் பிறவித்துன்பத்தின் தொடர்பை அறுத்து இன்பத்தை வளர்த்து அன்பையுண்டாக்கி என்னுடைய மனதையே விரும்பித் தன்னுடைய உறைவிடமாக்கி ஞானசோதியாய் வீற்றிருக்கின்றனன்.

---

# ஆநந்தமாலை

## சிவானுபவ விருப்பம்.

---

சீலமின்றி நோன்பின்றிச் செறிவே யின்றி அறிவின்றித், தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து

கிடப்பேனை, மாலுங் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறி யேறக், கோலங் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே. (௬)

இ—ள்: நல்லொழுக்கம், விரதம், அன்பு, அறிவு ஆகிய இவைகள் ஒன்றுமில்லாமற் செய்வதின்னதென்று தெரியாமல் தோற்பாவைக் கூத்தாட்டம்போலச் சுழன்று விழுந்து கிடக்கவேண்டிய எனக்குத் தன்னிலே ஆசையுண் டாக்கித் தன்னையடையவேண்டிய வழியைக் காட்டிப் பிறவியினின்றும் நீக்கும் முத்திநெறியிற் சேர்க்கத்தக்க தன்னுடைய குருவடிவத்தைக்காட்டி என்னை ஆட்கொண் டருளிய இறைவனை நான் கூடுவதெக்காலம்?

---

# அச்சப்பத்து

## ஆனந்தமுறுதல்.

சிவானந்தத்தைப் பெற்று அதன் அருமையை உணர்ந்து அதைத் தந்தவராகிய சிவபிரானை வழிபடாதிருத்தல் கொடுமை களுட் கொடுமையென்றும், அப்படி வழிபடாதிருப்பவரைப் பார்த்தலும் ஆகாதென்றும் பாடியருளுகின்றார்.

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப் பும் அஞ்சேன், துணிநிலா அணியினான்தன் தொழும்ப ரோடழுந்தி அம்மால், திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடிபரவி வெண்ணீ, றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே. (௫)

இ—ள்: எல்லாநோய்களும் ஒரேசமயத்திலே வந்தா லும் பயப்படேன். எத்தனை பிறவிகளெடுத்திறப்பதானா லும் அவைகளுக்கு அஞ்சேன், இளம்பிறையையணிந்த சிவபிரானுடைய அடியவர்களோடு கலவாமலும் அந்தமகா விஷ்ணுமூர்த்தியானவர் வயிரித்த நிலத்தைப்பிளந்துங்

காணமாட்டாத திருவடிகளைத் துதியாமலும் திருவெண்ணீறணியாமலுமிருப்பவரைக்கண்டால் அம்மா! நான் அஞ்சுகின்றேன்.

---

# பண்டாயநான்மறை

## அநுபவத்துக்கு ஐயமின்மையுரைத்தல்.

இது சிவப்பற்றிருந்தாற் சிவானுபவம் பெறுதற்கு ஐயமில்லையென்று காட்டுகின்றது.

உள்ள மலமூன்றும் மாய வுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த—வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. (உ)

இ—ள்: குதிரையின்மேலேறிவந்த அருள்வள்ளலாகிய சிவபெருமான் ஆன்மாக்களைப் பற்றிநிற்கும் மும்மலங்களுங் கெடுதற்குப் பேரின்பமாகிய ஒடுகின்ற தேன்வெள்ளத்தைத்தரும். அவன் எழுந்தருளியிருக்குந் திருப்பெருந்துறையைத் தொழுங்கள். தொழுதால் பிறவிக்காடு வேர் அற்றுப்போம்.

---

# செத்திலாப்பத்து

## சிவானந்தம் அளவறுக்கொணாமை.

அன்ப ராகிமற் றருந்தவ முயல்வார்
அயனு மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரே னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்

வன்ப ராய்முரு டொக்கும் என்சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. (௪)

இ—ள்: பிரமாவும் விஷ்ணுவும் உன்னிலே அன்புடையவராகிச் செயற்கரிய தவத்தைச் செய்கின்றார்கள். வேறுமெத்தனையோபேர் நெருப்பிலேபட்ட மெழுகுபோல எலும்பும் உருகுகின்ற அன்போடு உன்னைத் தியானிக்கின்றார்கள். இவர்களை ஆட்கொள்ளாமல் என்னை ஏன் ஆட்கொண்டாய்? என்னுடைய மனம் பாராய்விறகுபோல வயிரித்திருக்கின்றது; என்னுடையகண் மரத்தைப்போன்றது; என்னுடையசெவி இரும்பைப்போன்று உறுதிமொழிகளைக் கேட்கமாட்டாமலிருக்கின்றது; அழகிய பராய்த்துறையில் எழுந்தருளியிருப்பவனே, சிவலோகனே, திருப்பெருந்துறை இறைவனே.

---

# குலாப்பத்து

## அநுபவம் இடையீடுபடாமை.

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின்குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.
(௫)

இ—ள்: என்னுடைய எலும்புகளை முற்றாகக் கசியச் செய்து, இருவினைகளின் வலியைக்கெடுத்துப் பிறவித்துன்பத்தைப்போக்கி, விருப்பு வெறுப்பு முதலிய இருமையான

---

* குலா—சிறப்பு, பிரகாசம்.

பற்றுக்களைநீக்கி நிர்மலனாக்கி, ஆகாமியத்தை முற்றாக அறுத்து, என்னுள்ளத்திலே புகுந்து நிலையாகவிருக்கும் அன்பு விளங்குகின்ற தில்லைக்கிறைவனை நான் பெற்றுக் கொண்டேன்.

---

# உயிருண்ணிப்பத்து

## சிவானந்தமேலிடுதல்.

---

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்த னாக்கிச் [யும்
சினமால்விடை உடையான்மன்னு திருப்பெருந்துறைஉறை
பனவனெனைச் செய்தபடி றறியேன் பரஞ் சுடரே.

கோற்றேன் எனக்கென் கோகுளை கடல்வாய்அமுதென்கோ
ஆற்றேன்எங்கள் அரனே அரு மருந்தேஎன தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின் மலனேஉனை யானே. (அ)

இ—ள்: மனம் வாக்குக்கெட்டாத சிவபெருமான் ஆனந்தக் களிப்பைத் தந்து என்னைப் பித்தனாக்கினதால், என்னை நானென்று அறிகின்றிலேன். பகலிரவென்ற பேதமும் அறிகின்றிலேன். விஷ்ணுவாகிய இடபத்தை வாகனமாகக் கொண்டவனும் திருப்பெருந்துறையி லெழுந்தருளியிருப்பவனும் ஞானசோதியுமான பரமாசாரியன் எனக்குச்செய்த இந்தச் சூழ்ச்சியை அறியேன்.

என்னை யாட்கொண்டவகையையும் என்னிலுண்டான மாற்றங்களின் காரணமும் நான் அறியேன் என்பது கருத்து.

நீர்வளம் பொருந்திய வயல்கள் பக்கத்திலே சூழ்ந்த திருப்பெருந்துறையிலெழுந்தருளிய நீறணிந்த திருமேனி

---

உயிருண்ணல்—சிவம் உயிரைக்கொள்ளுதல்.

யையுடைய நிர்மலனே, உன்னை நான் கொம்புத்தே னென்று சொல்லவோ, ஒலிக்கின்ற திருப்பாற்கடலிற் றோன்றிய அமுதமென்று சொல்லவோ, நீ எனக்குத்தந்த ஆனந்தத்தை நான் அநுபவித்தொழியமாட்டேன். எங் கள் பாசங்களை நீக்குபவனே, அரிய அமுதமே, எனது இறைவனே.

---

# திருப்புலம்பல்

## சிவானந்தமுதிர்வு.

---

சிவானந்த முதிர்ச்சியினலே சிவபெருமானே துணையென் றும் அவருடைய திருவடியல்லாமல் வேறென்றையும் புகழே னென்றும் பாடுகின்றார்.

*சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்*
*படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை [நான்*
*விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்*
*உடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே (உ)*

இ—ள்: ஞானவடிவமாகிய சடையைத்தாங்குபவனே, சிவாக்கினியில் எழுந்தருளியிருப்பவனே, விளங்குகின்ற மூன்று கவர்களையுடைய சூலப்படையை யுடையவனே, பரஞ்சுடரே, ஆன்மாக்களுக்குத்தலைவனே, இளமையான வெண்ணிறம்பொருந்திய இடபமாகிய வாகனத்தையுடைய வனே, பரந்த சோலைகள்சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனே, உன்னடியவனாகியநான் என்னை யுடையவனாகிய உன்னையல்லாமல் வேறுதுணையை யறி யேனே.

---

# அற்புதப்பத்து
## அநுபவம் ஆற்றுமை.

அஃதாவது சிவானுபவம் முதிர்ந்து அதைச்சகிக்கமாட்டாம லிருந்து அதனுடைய பெருமையை நினைந்து அதிசயித்தல்.

*நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானென தெனும்மாயக், கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக் கழறியே திரிவேனைப், பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய அரும்பொருள் அடியேனை, அடித்த டித்துஅக் காரமுன் தீற்றிய அற்புத மறியேனே.* (ரு)

இ—ள்: வஞ்சகமாக வாழ்ந்து இந்தப்பூமியிலே பல தவறுகளைச்செய்து, அகந்தை மமதையென்று சொல்லப் படும் மயக்கத்தைத்தரும் பாம்பானது கடித்த இடத்திலே ஆகாமியமாகிய விஷம் மிகுந்துசெல்லப் புலம்பிவருந்தித் திரிகிற என்னைப் பெரிய வேதங்கள் தேடி அறிதற்கரிய அந்தப்பரம்பொருளானது எனக்குமுன்னே நின்று பிடித் துக்கொண்டு எனக்கு அடித்து அடித்துச் சர்க்கரைதீற்றிய அற்புதத்தை நான் விளங்கமாட்டேனே!

இனிய பொருளாகிய முத்தியின்பம் கசப்பாகத்தோன்றிய படியால் அக்கசப்பான சுவை நீங்குதற்காகப் பரிகாரஞ்செய்து, அதை இனிப்பாக்கித் தீற்றினர் என்பது கருத்து. உமாபதி சிவம் முத்தியின்பத்தைப் பாலுக்கும், மலமயக்கத்தைப் பித்தத் துக்கும் ஒப்பிட்டு, மலமயக்கமாயிருக்கும்போது முத்தியின்பங் கைக்குமென்றும், மலம் நீங்கியபின்பு இனிக்குமென்றும் கருதி,

"தித்திக்கும் பால்தானுங் கைக்குந் திருந்திடுநாப்
பித்தத்தின் றன்றவிர்ந்த பின்" என்றுபாடியருளினர்.

# திருப்பாண்டிப்பதிகம்

## சிவானந்த விளைவு.

சிவானந்த விளைவென்பது சிவானந்தம் பெருகுதல்.

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர், பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார், ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண் டரை உள்ளங் கொண்டார், பேரின்ப வெள்ளத்துட் பெய் கழ லேசென்று பேணுமினே. (௩)

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே. (௪)

இ—ள்: நீர் இன்பக்கடலிலே நீந்திக் குளிக்கின்ற விருப்பத்தையுடையீர், அப்படியானால் உலகத்தவர் யாவரும் இன்பக்கடலைச் சேரத்தக்கதாகக் குதிரையின்மீதுவந்தருளியபாண்டிப்பெருமான் ஒப்பற்ற இன்பக்கடலையே வடிவமாகக் கொண்டு அடியவரை இழுத்துக்கொண்டார். நீரும் அந்தப் பேரின்ப வெள்ளத்துக்குள்ளேபோய் அந்த அழகிய திருவடியைப் பேணிக்கொள்ளும்.

காலமிருக்கிறபொழுதே சிவபெருமானில் அன்பு செய்து உங்களை ஈடேற்றிக்கொள்ளுங்கள். நினைத்தற்கரிய பெருமையையுடைய விஷ்ணுவும் பிரமாவும் மற்றைய தேவர்களும் கிட்டுதற்கரியதாயிருந்த நஞ்சையுண்ட பாண்டிப்பெருமான் மூலநிதியாகிய பேரின்பத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறான். முந்திவந்து அதைப்பெறுங்கள்.

# செ ன் னி ப் ப த் து

## சிவவிளைவு.

சிவவிளைவென்பது சிவானந்த அநுபவத்தின் பின்வருதலாகிய சிவத்தன்மை விளைதல்.

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன் பேரருள்தந் தருளினன், அறவை யென்றடி யார்கள் தங்க ளருட்குழாம்புக விட்டுநல், உறவு செய்தெனை உய்யக் கொண்ட பிரான்தன் உண்மைப் பெருக்கமாம், திறமை காட்டிய சேவ டிக்கணநம் சென்னி மன்னித் திகழுமே. (எ)

இ—ள்: சிவபிரான் பிறவியாகிய இந்தக்கடலைக் கடத்தற்குத் தன்பேரருளைத் தந்தருளினன். ஒருதுணையுமில்லாதவனென்று என்னைத் தன்னுடைய அடியாரதுகூட்டத்திலே சேர்த்து அவர்களை எனக்கு உறவாக்கி ஈடேற்றிய அவனுடைய உண்மையான அருள்விளைவைக்காட்டிய திருவடிகளிலே எமது தலைபொருந்தி விளங்கும்.

# எ ண் ண ப் ப தி க ம்

## ஒழியாவின்பத்துவகை.

அஃதாவது நீங்கா சிவானந்தத்திலே கண்ட மகிழ்ச்சி.

என்பே உருக நின்னருள் அளித்துன் இணைமலர் அடிகாட்டி, முன்பே எனை ஆண்டு கொண்ட முனிவா முனிவர் முழுமுதலே, இன்பே அருளி எனைஉருக்கி உயிருண்கின்ற எம்மானே, நண்பே அருளாய் என்னுயிர் காதா நின்னருள் நாணுமே. (ரு)

இ—ள்: என்புமுருகத்தக்கதாக உன்னுடைய திருவருளைத்தந்து உன்னுடைய இரண்டு மலரடிகளையுங் காட்டி முன்னமே என்னை ஆட்கொண்டருளிய விருப்பு வெறுப்பில்லாதவனே, முனிவாது முழுமுதற்பொருளே, இன்பத்தையே தந்து என்னைஉருக்கிப் பசுபோதத்தை நீக்குகின்ற எம்பெருமானே, என்னுயிருக்கு உயிரானவனே, நிறைந்த அருளைத்தந்து என்னை ஐக்கியமாக்கியருள்.

---

# யாத்திரைப்பத்து

## அநுபவாதீதமுரைத்தல்.

அஃதாவது சிவாநுபவங் கடந்த நிலையைச்சொல்லுதல்.

*சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்*
*போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளமுதம்*
*ஆரப் பருகி ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர்*
*போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற்கிடந்துபுரளாதே.*
(கூ)

இ—ள்: அன்பர்களே, சிவபுரத்தை அடைதற்கு விரும்பி உங்களுடைய சித்தத்தைத்திருத்திவைத்து அப்பொருளையே சிந்தியுங்கள். சிந்தித்தால், போரிலே விளங்குகின்ற வேற்படையையொத்த கண்ணையுடையவளாகிய உமையம்மையைப் பாகத்திலுடைய சிவபெருமானது திருவருளாகிய அமுதத்தை நிறையப்பருகி எல்லையில்லாத ஆனந்தக்கடலில் அமிழ்ந்துவீர்கள். நிலையற்ற இழிவான உலக இன்பத்திலே கிடந்து உழலாமற் சிவபெருமானுடைய திருவடியையடைய விரும்புங்கள்.

போர=போக.

---

# அச்சோப்பதிகம்

## அநுபவவழியறியாமை.

அஃதாவது சிவாநுபவத்தை அடையவேண்டிய வழியை அறியாமைக்குக்காரணம் தீய சகவாசமென்பது.

*முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்*
*பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்*
*சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட*
*அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (க)*

*செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை*
*மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்*
*நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகையேற்றுவித்த*
*அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. (கூ)*

இ—ள்: உலகப்பற்றுக்களினின்றும் நீங்குகின்றவழியையுணராத மூர்க்கரோடு சேர்ந்து திரிந்த எனக்குச் சிவப்பற்றைத் தரும் வழியைக்காட்டி, முன்வினைகளை யறுத்தற்காகமனதிலேயுள்ள மயக்கத்தை வேரோடறுத்து, எனக்குச் சிவத்தன்மையைத்தந்து ஆட்கொண்டருளிய என்னுடைய பரமபிதா எனக்குத்தந்த அருள் யாருக்குக்கிடைக்கப்போகின்றது.

சிவவழிபாட்டின் நன்மையையறியாத மூடர்களோடு திரியவேண்டிய என்னுடைய மும்மலங்களையுங் கெடுத்து முழுமுதற்பொருளாகிய தலைவன் என்னையும் ஒருபொருட்படுத்தி நாயைச் சிவிகையிலேற்றினாற்போல எனக்குச் சிவகதியைத் தந்தருளிய திருவருளை வேறு யார்பெறத்தக்கவர்?

# இந்நூல் கிடைக்குமிடம்.

விவேகானந்த புத்தகசாலை,
மேட்டுத்தெரு,
கொழும்பு.

VIVEKANANDA BOOK DEPOT,
HILL STREET,
COLOMBO.

இங்கே;

இந்நூலாசிரியர் இயற்றிய ஏனைய நூல்கள்:-

| பெயர். | விலை. ரூபா. சதம். |
|---|---|
| சைவ போதம்—முதற்புத்தகம் | -25 |
| டி டி—இரண்டாம் புத்தகம் | -40 |
| டி டி—மூன்றும் புத்தகம் (திருவருட்பயன்) | -40 |
| சைவக்கிரியை விளக்கம் | -25 |
| சைவ சித்தாந்தம் | -10 |
| கந்த புராண விளக்கம் | -45 |
| அக நூல் (Psychology) ராப்பர் | 1-40 |
| டி ( ,, ) கலிக்கோ | 1-75 |
| The Saiva School of Hinduism | 4-50 |

முதலியனவும், வேறு-(தேவாரம், திருவாசகம் முதலிய புகழ் நூல்கள், இலக்கணம், இலக்கியம், புராணம், சமய நூல்கள், நீதி நூல்கள், கட்டுரை, ஆராய்ச்சி, பெரியார் வரலாறு, மாணவர்க்கும் சிறுவருக்கும் பிறருக்கும் ஏற்ற சிறுகதைகள், பள்ளிக்கூடப் புத்தகங்கள், கலாசாலை, நூல்நிலையம், பரிசு, முதலியவற்றுக்குத் தகுதியான நூல்கள், முதலிய)-சகலவிதமான புத்தகங்களும், அழகிய கட்டடம், திருத்தமான அச்சு முதலிய சிறப்புக்கள் அமைந்தனவாய், பெறற்பாலன. வேண்டியவற்றுக்கு எழுதுக.